சுஜாதா குறுநாவல் வரிசை – 7



# சுஜாதா



# மனைவி கிடைத்தாள்

# மனைவி கிடைத்தாள்

## 1. சாமி - மூர்த்தி

பத்து மணிக்கு அண்ணசாமியும், கிருஷ்ண மூர்த்தியும் பஸ் நிலையத்தில் வந்து இறங்கினார்கள். வரவேற்க யாரும் இல்லாதது அண்ணசாமிக்குக் கவலையாக இருந்தது. தகவல் போகவில்லையா, அல்லது ஏதாவது அசந்தர்ப்பமா?

"என்னடா ஒருத்தரையும் காணோம்?" என்றான் மூர்த்தி.

"அதானே" என்றான் சாமி.

"ஆரம்பத்திலேயே இவ்வளவு அலட்சியமா? சேச்சே, வேறு ஏதாவது காரணம் இருக்கும்."

"பெண்பார்க்க வர்றவங்களுக்கு இந்த ஊர்ல அப்படித்தான் மரியாதையா? நாமே வீட்டைத் தேடிட்டுப் போய் ஸார் என்று கதவைத் தட்டணுமா? வாடா அடுத்த பஸ்ல போயிறலாம். எத்தனையோ பெண்கள். நம்ம ஊர்ல இல்லாத பொண்ணா! ஒருத்தொருத்தர் ஏரோப்ளேன் சார்ஜ் கொடுத்து அழைச்சுட்டுப் போறாங்க."

"இரு மூர்த்தி. கொஞ்ச நேரம் வெயிட் பண்ணிப் பார்க்கலாம். நாம போட்ட கடிதம் போய்ச் சேரலயோ என்னமோ!"

சாமி சுற்றிலும் பார்த்தான். பழக்கடை நிறைய ஆப்பிள்கள் வெட்கப்பட்டன. ஆரஞ்சுகள் விழித்தன. நூறு பத்திரிகைகள் தொங்கின. ஒரு பெரிய பொதுக் கூட்டத்தைக் கலைக்கற அளவிற்கு சோடா பாட்டில்கள். நன்னாரி சர்பத்தைச் சுற்றிலும் ஈக்கள் விளையாடிக் கொண்டிருந்தன. பெரிய சட்டையைப் போட்டுக்கொண்டு பிளாஸ்டிக் மூடியில் ஒரு பையன் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான்.

"ஏதாவது வாங்கிண்டு போகலாமா?"

"எதுக்கு? ஒண்ணும் வேண்டாம் வா." ஸ்ரீ விநாயகா பவன் காப்பி சாப்பாடு ஓட்டலிலிருந்து (பெரும் வியாதியஸ்தர்கள் உள்ளே நுழையக் கூடாது) ரோசாப் பூ ரவிக்கைக்காரி பாட்டு ஒலித்தது. அவர்கள் உள்ளே சென்று உட்கார்ந்ததும் அலுமினிய தம்ளரில் விரல் நனைய தண்ணீர் கொண்டுவந்து (லொட்!)



"என்ன ஸார் வேணும்?"

போண்டாவை முதலில் கடித்துப் பார்த்த மூர்த்தி காலண்டரைப் பார்த்து, "ஏம்பா இந்த போண்டா எப்பப் பண்ணது?" என்றான். ஹோட்டல் ஒலிபெருக்கி "வெத்தல வெத்தல வெத்தலயோ?" என்றது. சாமி கையலம்பும் பொழுது தன் முகத்தை ரசம் போன கண்ணாடியில் பார்த்துக்கொண்டான். அஞ்சுமணி நேர பஸ் பிரயாணம் முகத்தில் வழிய துடைத்துக் கொண்டாலும் அவன் பிரகாசமாகவில்லை. புதிதாக ஒரு ஆசாமி உள்ளே வந்து சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு கல்லாவில் விசாரிப்பது கண்ணாடியில் தெரிந்தது. மூர்த்தி அவரை அணுகினான். புதுச்சட்டை, அங்க வஸ்திரம் அணிந்து பளபளவென்று தலைவாரி நெற்றிப் பொட்டுடன் "நீங்கதானே அண்ணாசாமி?" என்றார், "இல்லை, இதோ வரான் பாருங்கோ! நீங்க பெண் வீட்டுக்காரங்களா?"

"ஆமாம். மன்னிக்கவும்... டவுன் பஸ் ஸ்டாண்டில் நின்னுண்டிருந்தேன், நீங்க இங்க வந்துட்டீங்க."

"இது டவுன் பஸ் ஸ்டாண்டு இல்லையா?"

"இது மெயின் பஸ் ஸ்டாண்டு."

"சரிதான் சுவாமி. உங்க உள்ளூர் பழக்கம் வழக்கம் எல்லாம் எங்களுக்கு எப்படித் தெரியும்? திரும்பிப் போறதா இருந்தோம்."

"திரும்பிப் போறதாவது... வண்டில ஏறுங்கோ!" குதிரை வண்டி, தொத்தல் குதிரை. த..த என்று அதட்டிய வண்டிக்காரன் குதிரையைவிட புராதனமாக இருந்தான். வருஷக் கணக்கில் பட்டையடித்து கண்கள் கலங்கியிருந்தான். "என்ன தம்பி விருந்தாளிங்களா?"

"ஆமாப்பா."

"ஒரு ரூபா போட்டுக்கொடு. திரும்ப காலியாக சவாரி வரணும் பாரு. அப்புறம் கல்யாண சவாரி."

மணிக்கூண்டு. பஞ்சாயத்து அலுவலகம், மகளிர் கல்லூரி, மார்க்கெட்... எல்லாவற்றையும் புறக்கணித்து ஒதுக்குப்புறமாக இருந்த காலனியில், ஒதுக்குப்புறமாக இருந்த பகுதியில் கடைசி வீட்டுக்கு முந்தின வீட்டைச் சுற்றி கலகலப்பாக இருந்தது. வாசலில் செம்மண், மாவிலைத் தோரணம். நிறைய செருப்புக்கள். யார் யாரோ சிரித்தார்கள். மற்றும் யார் யாருக்கோ அறிமுகப்படுத்தினார்கள். இது பெண்ணுக்கு மாமா, தாத்தா, தகப்பனார், ஒண்ணுவிட்ட அண்ணன்.

"டவுன்ல இறங்காம பெரிய பஸ் ஸ்டாண்டுக்குப் போய்ட்டா."

"அடடா! நீ லெட்டர்ல எழுதலயா?"

"ஸார் உங்க அம்மா வர்றதா சொன்னாளே?"

"அம்மாவுக்குத் திடீர்னு தலைவலி மாதிரி வந்துட்டுது..."



"இவர் யாரு!"

"என் ப்ரண்ட், கூட பாக்டரியில் வேலை செய்யறான்." மேலும் மேலும் தாத்தாக்கள்தான் திரையைப் பிடித்துப் பிடித்து வெளியே வந்து கொண்டிருந்தார்களே தவிர... பெண்? ம்ஹூம், இன்னமும் வரவில்லை. ஏழெட்டுப் பொடிப் பயல்கள், சிறுமிகள். அவன் முன்பு ஒரு அடி விட்டத்தில் உட்கார்ந்துகொண்டு அவனையே பார்த்துக்கொண்டிருக்க, மூர்த்தி ஓரத்தில் நிலைப்படியில் நின்று அவனைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

"ஆனிஃப் கம்ஸ் இன் அண்ட் பௌல்ஸ்."

"ரேடியோவை நிறுத்துடா."

"வாங்கோ வாங்கோ. பெரிய பஸ் ஸ்டாண்டில் எறங்கிட்டேளாமே."

இந்த பஸ் ஸ்டாண்டு விஷயத்தை இதுவரை ஒன்பது பேர் கேட்டாகிவிட்டது. பஜ்ஜி, சொஜ்ஜி தாங்க முடியாத சூடு. காப்பி வந்தது. கேஸரியை விழுங்கினான். முந்திரிப் பருப்பு நிரடியது. பெண் வந்தாள்.

மெல்ல தலை குனிந்துகொண்டு. பின்னால், அம்மா வர இந்தப் பக்கம் அவள் தங்கையோ யாரோ வர... அந்தப்பக்கம்... ம்ஹூம், சாமிக்கு அவர்கள் எல்லாம் இப்பொழுது பொருட்டல்ல

அண்ணாசாமிக்கு எதிரே ஒரு நாற்காலி போடப்பட்டது. அதில் அவள் உட்கார்ந்தாள்

விளிம்பில் உட்கார்ந்து கால்சட்டை விரலையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் நெற்றி வகுடு தெரிந்தது. தீர்க்கமான மூக்கு தெரிந்தது. உடம்பைப் பூராவும் மூடியிருந்த நீலப்பட்டுப் புடவை தெரிந்தது. வெளியில் தெரிந்த விரல்களின் நுனியில் பவழச்சிவப்பு. நிறமான நிறம். அப்புறம் ஒட்ட வைத்துக்கொண்ட கால் மடங்கு, பாதங்கள் தெரிந்தன, இரண்டே இரண்டு தாமரைப் பூக்கள் போல்.

அப்பா, "ஏதாவது கேட்கணும்னா கேளு!" என்றார். ஒரே ஒரு தடவை நிமிர்ந்தாள். அண்ணாசாமி பார்த்தான். தூரத்திலிருந்து ஜன்னல் அருகிலிருந்து மூர்த்தியும் பார்த்தான். அடப்பாவி! என்று திகைத்தான். அண்ணாசாமிக்கு இப்படிப்பட்ட பெண்ணா! இத்தனை அழகா? எதிரே உட்கார்ந்திருந்த அண்ணாசாமிக்கு நல்ல கறுப்பான தேகம். ஆரியத்தன்மை எதுவும் இல்லாத திராவிட பிராமணன் (சின்ன வயசிலிருந்தே ஸ்காலர்ஷிப்புகளில் எப்போதும் ஏழ்மையின் விளிம்பில் வளர்ந்தவன்.) சதுரமுகம். அவன் சிரிக்கும் பொழுது அவன் கண்களும் சேர்ந்து சிரிக்கும். அவன் முகத்தில் அழகான அம்சம் என்று சொல்லக்கூடியது ஏறக்குறைய அது ஒன்றுதான். சின்ன மூக்கு, சிரித்தால் பற்கள் வெளிச்சம் போடும்...

இவனுக்கு இவளா? என்ன ஒரு அபத்தம்!



என்ன ஒரு குரூரமான சொர்க்கத்து நகைச்சுவை இது. இத்தனை அழகான பெண்ணை இவன் எப்படி சமாளிக்கப் போகிறான். கிருஷ்ண மூர்த்திக்குப் பொறாமையுணர்ச்சியும், அதனால் தன் மேல் சற்று கோபமும் ஏற்பட்டது. ஆனால் அந்தக் கல்யாண ஏற்பாட்டில் மெலிதான ஒரு அநியாயம் இருப்பதாக நினைத்தான். அதை எப்படிச் சரிப்படுத்த முடியும்! அதைச் சரிப்படுத்த தனக்குத் தகுதி இருக்கிறதா என்பது கூட தெளிவாக இல்லை. அண்ணாசாமி அதிர்ஷ்டக்காரன்.

அண்ணாசாமி தனக்கெதிரே உட்கார்ந்திருந்த பெண்ணைப் பார்த்தான். எனக்கா! இவளா இந்தப் பெண்ணா! இத்தனை அழகான பெண்ணா என்கிற உற்சாகமான எண்ணம் எழுந்தாலும்... அவன் உள்மனத்தில் ஒரு சின்ன நெருடலும் இருந்தது. அவளை நைசாகப் பார்க்க வேண்டும் என்று விரும்பினான். நேராக நிமிர்ந்து பார்த்து முகத்தைப் பார்த்து தனக்குப் பிடிக்கவில்லை என்றால் இப்பொழுதே சொல்லி விட வேண்டும். என்னைப் பூர்ண சம்மதத்துடன் ஏற்றுக்கொள்வாளா என்பது தெரிய வேண்டும். எப்படி? எப்படி இதையெல்லாம் அத்தனை பேர் மத்தியிலும் கேட்பது?

"பாட்டுப் பாடுவா, வீணை வாசிப்பா... அப்புறம் பேப்பர்ல பொம்மைகள் செய்வா..." இதெல்லாம் ஒண்ணும் வேண்டாம், வெறுமே நின்றால் போதும்.

அதுவே இந்த அழகான ராணிக்குப் போதும்.

"என்ன பேர்?" என்றான் சற்று ஹீனமாக.

"வேணி" என்றார் அப்பா, "முழுப்பெயர் கிருஷ்ணவேணி." அண்ணாசாமி! என் பெயர் நன்றாக இல்லை, அசோக்குமார் என்று மாற்றிக் கொள்ள வேண்டும். திருமதி வேணி அண்ண சாமி... நன்றாகவே இல்லை. இருந்தும் என் பழைய பெயருடன் என்னை நேசிக்கிறவளாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நல்லது. கேட்டுவிட வேண்டும் கேட்டுவிடு கேட்டுவிடு. மூர்த்தியைப் பார்த்தான். அவன் கண்களில் தெரிந்த உணர்ச்சியைப் புரிந்துகொள்ள முடிய வில்லை. எத்தகைய அன்னியோன்ய நண்பன் அவன். இரண்டு பேரும் ஒரே அறையில் மூன்று வருஷம் வாழ்ந்தவர்கள். சொக்காய் மாற்றிப் போட்டுக்கொள்வார்கள். கைலி மாற்றுவார்கள். கணக்கெழுதாமல் ஒருவனுக்கு ஒருவன் செல வழிப்பான், செக் எழுதுவான். மிகமிக அந்தரங்க விஷயங்கள் பற்றியும் பேசிக்கொள்வார்கள்...

"ஸார் உங்களோட தனியாப் பேசணும்."

மாமனார் தனியாக வெளியே வந்தார். வாசற் படியைத் தாண்டி தெருவில் சற்று தூரம் நடந் தார்கள். அண்ணாசாமி மெதுவான குரலில், "நிஜமாக நீங்க பதில் சொல்லணும். உங்க பெண்ணைப் பார்த்தேன். பேசலை. முதலில் எனக்கும் அவளுக்கும் ஜோடிப் பொருத்தம் கொஞ்சம்கூட இல்லை. என் நிறத்தை நீங்க



பாருங்க. உங்க பொண்ணு நல்லா சிவப்பா இருக்கா. நல்ல அழகா இருக்கா. அவளைக் கல்யாணம் செஞ்சுக்க நிறைய பேர் காத்துக் கிட்டு இருப்பாங்கன்னு எனக்கு நிச்சயம் தெரி யும். பின்ன ஏன்..."

"அப்படின்னா உங்களுக்குச் சம்மதம் இல்லையா?"

"சேச்சே. எனக்கு, எனக்குப் பரிபூர்ண சம்ம தம். எனக்கு இத்தனை அழகான ஒரு பெண்ணா...மை காட்! நம்பமுடியாத பிரமிப் பில் இருக்கேன். அவளுக்கு நான் அருகதையாங் கறதுதான் எனக்குப் புரியலை. நான் ஒரு சாதா ரண குமாஸ்தா. இவளைக் கல்யாணம் செய் துண்டா இவளை நான் வேலைக்கு அனுப்ப வேண்டிய ஸ்திதிகூட ஏற்படும். கல்யாணம் செஞ்சுக்க நான் நிச்சயம் தயார். ஆனா உங்க பெண்ணோட எனக்கு ஒரே ஒரு வார்த்தை கேட்கணும். "இதோ பார், என்னைப் பாரு. நல்லாவே பாரு. என் மூஞ்சியைப் பாரு. என் நிறத்தைப் பாரு. என் சம்பளத்தைப் பாரு. நல்லா பார்த்துத் தீர யோசித்து முடிவு பண்ணு. நிஜமாகவே என்னைக் கல்யாணம் செஞ்சுக்க உனக்கு விருப்பமான்னு அவளைக் கேட்டே ஆகணும். அதுக்குப் பதில், அவள் வாயால் என்னை நேராப் பார்த்து சொல்லியாகணும்."

"அவகிட்ட சொல்லறேன் இதை. சொல்லற தகவலைத் தெரிஞ்சுண்டு வரேன். கொஞ்சம்

இந்தத் திண்ணையில் உட்கார்றீங்களா. நேர பேசமாட்டா. அது இந்தச் சந்தர்ப்பத்துல நல்லதில்ல." அவர் உள்ளே சென்றார்.

ஓரத்தில் தூரத்தில் நின்றுகொண்டிருந்த மூர்த்தி வந்து "என்னடா சாமி" என்றான்.

"பெண்ணைப் பார்த்தேன். அழகா இருக்கா."

"நீ என்ன சொன்னே?"

"எனக்குச் சம்மதம். அவளுக்குச் சம்மதமான்னு கேட்கச் சொன்னேன்."

"அவ உன்னைப் பார்த்தாளா?"

"இல்லை. பார்த்துட்டுச் சொல்லச் சொன்னேன்."

"நல்ல காரியம் செஞ்சே" என்றான் மூர்த்தி. அவன் குரலில் மெலிதாக உற்சாகமிருந்தது. அவர்கள் இருவரும் காத்திருந்தார்கள். தெருவிலிருந்து பல முகங்கள் அவர்களை வேடிக்கை பார்ப்பதை உணர்ந்தான்.

"இந்தப் பொண்ணு மட்டும் எனக்குக் கிடைச்சான்னா..." என்றான் சாமி.

"ரொம்ப ரொம்ப அதிர்ஷ்டம் என்றுதான் சொல்லணும்" என்றான் மூர்த்தி. அவன் எண்ணங்கள் விரைந்தன பொண்ணுக்குத் தகப்பனார் வெளியே வருவதாகவும், வந்து சாமியைப் பார்த்து "ஸாரி சார், என் பெண் உங்களைப் பார்த்ததிலேர்ந்து கொஞ்சம் அடப்பிடிக்கிறா. கூட வந்தாரே அவரை வேணும்னா... கல்



யாணம் செய்துக்கறேன்னு சொல்லறா. ஸார் உங்க பேர் என்ன..."

மூர்த்தி "நானும் இவனைப் போலத்தான் சம்பளம். இங்கேயே தான் எனக்கும் பூர்வீகம். கொஞ்சம் சொத்து இருக்கிறது..."

"நீ... நீங்க கொஞ்சம் தனியாக வர்றீங்களா" என்று அண்ணாசாமியைப் பெண்ணுக்கு அப்பா கூப்பிட்டார்.

சாமி அவருடன் செல்ல, பரீட்சை ரிசல்ட்டுக்குக் காத்திருக்கும் மாணவன்போல உணர்ந்தான். மூர்த்திக்கு நிச்சயம் அது தெரிந்து விட்டது. அந்தப் பெண் அண்ணாசாமியை நிராகரிக்கப் போகிறாள். இதோ என்னைக் கூப்பிடப் போகிறார்கள். என்னைப் பார்க்கிறார் பெண்ணின் அப்பா... எனக்காகத்தான் வருகிறார்...

அவர் அண்ணாசாமியின் தோளில் கை வைத்துத் தனியே அழைத்துச் சென்றார், பேசினார்.

அவர் கைகள் அசைவதும் சாமி மௌனமாக முகமாறுதலின்றி கேட்டுக்கொண்டிருப்பதும் தெரிந்தது. மெதுவாக அவன் முகத்தில் ஒரு புன்னகையின் பாதி உருவாகி சிரிப்பாகி சந்தோஷமாக விரிந்தது.

"மூர்த்தி கை குடுடா ... சம்மதிச்சுட்டா. 'அவர் இந்த மாதிரி கேட்டதிலேயே எவ்வளவு நல்லவர், எவ்வளவு பெருந்தன்மையுள்ளவர்ன்னு தெரிஞ்சி போச்சு. அவரைக் கல்யாணம்

பண்ணிக்கறதுக்கு பரிபூரண சம்மதம்னு' சொல்லிட்டாளாம். மூர்த்தி எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கு தெரியுமா. அப்படியே திடீரென்று இந்த உலகம் பூராவும் எனக்குச் சொந்தமாயிட்ட மாதிரி தெரியுது. மூர்த்தி, மூர்த்தி! நான் எவ்வளவு அதிர்ஷ்டக்காரன்..."

மூர்த்தி, "கங்கிராஜுலேஷன்" என்றான். அவனுக்குள் ஏதோ ஒன்று படக் என்று அறுந்தது.

## 2. மூர்த்தி

**மூ**ர்த்தி மௌனமாகவே இருந்தான். அவன் மனம் பூரா, உடல் பூரா விரவியிருந்த உணர்ச்சி அவனுக்குப் புதிதாக இருந்தது. பொறாமையா... சே! பொறாமை. தப்பு. எதற்காகப் பொறாமைப் பட வேண்டும்? இந்த உலகத்தில் இந்தப் பொண்ணைவிட்டால் எத்தனையோ அழகிகள் இருக்கிறார்கள். இருந்தும் இந்தப் பய்லுக்குப் போய் இப்படி ஒரு அதிர்ஷ்டமா? அதுதான் ஆத்து ஆத்துப் போறது. சே, சாமி பாவம்! அவனுக்கு ஒரு நல்ல காரியம் நேர்ந்தால், நான் ஒரு நண்பன் என்ற முறையில் சந்தோஷப் பட வேண்டும். எதற்காக இப்படி உள்ளுக்குள் வேகிறேன்?

"மூர்த்தி என்ன பேசவேயில்லை."

"தலைவலி" என்றான்.



"பஸ் கிளம்ப இன்னமும் பத்து நிமிஷம் இருக்கு. தலைவலி மாத்திரை வாங்கி வரட்டுமா?"

"வேண்டாம் சரியாயிடும்."

"வீடு பார்க்கணும். மைலாப்பூர் பக்கம் வாடகை அதிகமாக இருக்கும் இல்ல. இப்பவே கேஸ், ரேஷன்கார்டு எல்லாம் ஏற்பாடு பண்ண வேண்டும். அப்புறம் பால் கூப்பன். மூர்த்தி, நீ என் வீட்டுக்கு வருவ இல்லை! நல்ல காப்பி போட்டுத் தருவா. நல்லாப் போடுவான்னு மாமனார் சொன்னார். ஏழைக் குடும்பம்... வர தட்சணை... மூச்சு! பேசப்படாதுன்னு சொல்லிட்டேன். கல்யாணச் செலவில் பாதி நான் ஏத்துக்கிறேன். சிம்பிளாகவே கல்யாணத்தை முடிச்சுடலாம் என்று சொல்லிட்டேன். நீ என்ன சொல்ற?"

"கரெக்ட்."

'அன்புள்ள. ஐயா, உங்கள் பொண்ணுக்குப் பார்த்திருக்கும் அண்ணாசாமி என்பவரைப் பற்றி சில விஷயங்கள் சொல்ல வேண்டியது உண்மையின் பெயரில் கட்டாயமாகிறது. அவனுக்குக் குடிப்பழக்கம் இருப்பது உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஏற்கனவே கல்யாணமாகி, ஒரு குழந்தை இருப்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இதை போட்டோ ஆதாரங்களுடன் என்னால் காண்பிக்க முடியும். உங்கள் மகளின் நலனைக் கருதி இந்தக் கல்யாணத்தை உடனே நிறுத்தும் படி சொல்கிறேன் –

இப்படிக்கு உண்மை விளக்கி...'

"என்ன யோசிக்கிறே!"

"உனக்கு என்ன பரிசு கொடுக்கலாம்னு."

"நீ கல்யாணத்துக்கு வந்தாலே அதுவே பெரிய பரிசு."

"வரேன்." அந்த எழுதாத கடிதத்தை மனத்தில் கிழித்துப் போட்டான். 'சே, என்ன ஒரு கிராதகன் நான். யார் யாரைக் கல்யாணம் செய்துகொண்டால் எனக்கென்ன...?' இருந்தும் இருந்தும்...

'இவனுக்குப் போய் இந்த அதிர்ஷ்டமா?'

'கூடாது.'

'கூடாதென்று சொல்ல நீ யார்?'

'சூழ்நிலை சந்தர்ப்பங்கள் சற்று வேறு விதமாக இருந்திருந்தால் எனக்கு அவள் கிடைத்திருக்கலாமல்லவா?'

"சாமி, எப்ப நீ இவங்கள முதலில் பார்த்தே!"

"யாரை?"

"உன் எதிர்கால மாமனாரை."

"மாமனார்ன்னு சொன்னாலே நிச்சயம் ஆய்டுத்தே."

"இருந்தாலும் கல்யாணம் ஆறவரைக்கும் எதிர்கால மாமனார்தானே?"

"எனக்கு என்னமோ நாளைக்கே கல்யாணத்தை முடிச்சுடலாம்ன்னு தோணுது... தை



மாதம் வரை காத்திருக்கணுமாம். ஸில்லி!"

"எப்ப அவர்களைப் பார்த்தே?"

"போன மாசம் பதினைஞ்சாம் தேதி."

"எப்படி?"

"நம்ப ஆபீஸ் பாலு இல்லே? அவர் சொன்னார். இதில் ஒரு வேடிக்கை பாரு! நாம ரெண்டு பேருமே ஆபீஸ்ல எலிஜிபில் பாச்லர்ஸ். உன்னைத்தான் முதலில் ஸஜஸ்ட் பண்ண இருந்தார். அன்னிக்கு உன்னைத் தேடிண்டுதான் வந்தார். நீ அன்னிக்கு லீவுல இருந்தே. அதனால் பக்கத்து டெஸ்கில் இருந்த என்னைக் கேட்டார். ஜாதகம் வேணும்னார். நான் எங்க அப்பா அட்ரஸ் கொடுத்தேன். எழுதி ஜாதகம் வாங்கிண்டு பொருத்தம் பார்த்திருக்கார். அவர்களுக்கு ஜாதகத்தில் ரொம்ப நம்பிக்கை. எல்லா அம்சங்களிலேயும் பொருந்தியிருக்காம், எங்க ரெண்டு பேர் ஜாதகமும்... விதி... பார்த்தியா!"

"ஆம் விதி." குரூரமான விதி!

"சொர்க்கத்தில் நிச்சயமாகிறதுன்னு அவர் சொல்லறது என்னமோ உண்மைதான்."

மூர்த்திக்கு உள்ளே அந்தத் தீ பற்றிக்கொண்டு அங்கங்கள் சகலத்தையும் வியாபித்தது. எனக்குக் கிடைக்க வேண்டியவள் இவனுக்கா!

என்ன செய்வது? என்ன செய்ய முடியும்? அந்தக் கடிதத்தை எழுதிவிடலாமா? எழுதி விடலாம்... யோசித்துச் செய்யலாமா? யோ

சனை ஏன்? துரோகமல்லவா? துரோகம் எனக்கு இழைக்கப்பட்டதே! அந்தப் பாழாப்போன பாலு ஒரு நாள் தாமதிருக்கக் கூடாதா? ஒரே ஒரு நாள்... இருபத்தி நான்கு மணி நேரம்... இந்தக் கல்யாணத்தை நடக்கவிடாமல் செய்து விட வேண்டும்.

"முதல் முகூர்த்தம் எதுவோ அதில் பார்த்து ஏற்பாடு பண்ணிடுங்கன்னு சொன்னேன். மூர்த்தி ஊருக்குப் போய்ச் சேர்ந்த உடனே முதல் காரியமா வீடு பார்த்தாகணும். எனக்கு ஹெல்ப் பண்றியா?"

மூர்த்தியின் மனத்தில் பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. "ஒரு வீடு கைவசம் இருக்கு" என்றான்.

"அப்படியா? எங்கே?"

"எனக்குத் தூரத்து உறவுக்காரங்க ஒருத்தர் டில்லிக்கு மாற்றலாகிப் போறாங்க. சொந்த வீடு. ரெண்டு வருஷத்தில பிரமோஷனாகித் திரும்பறதுக்கு சான்ஸ் இருக்காம். அதனால் நீ ஒரு கேர் டேக்கர் மாதிரி இருந்து ஷார்ட் நோட்டிஸ்ல காலி பண்ணறவங்க யாராவது இருந்தா வாடகைக்கு விடுன்னு சொல்லியிருக் காங்க. அதை எடுத்துக்கலாம். பெரிய வீடு."

"கிரேட் மூர்த்தி... வாடகை?"

"வாடகையை அப்புறம் முடிவு பண்ணலாம். உன்னால் எவ்வளவு குடுக்க முடியுமோ அதைக் கொடு. மூணு ரூம் பிளாட். அண்ணாமலை



புரத்தில... ஒரு ரூம்ல நான் இருந்தாகணும். மற்ற ரெண்டு ரூம், கிச்சன், டைனிங் ரூம் எல்லாம் நீ உபயோகப்படுத்திக்கலாம். இரண்டு வருஷத்துக்குப் பழுதில்லை. அதுக்குள்ள..."

"ஓ காட். என்ன ஒரு அதிர்ஷ்டக்காரன் நான் மூர்த்தி...! யு ஆர் அன் ஏஞ்சல்."

"நான் உடனே போய் அவங்களைப் பார்க்கறேன்."

"நானும் வரட்டுமா?"

"வாயேன்."

"மூர்த்தி, அப்படியே உன்னைக் கட்டிக்கணும் போல இருக்கு" மூர்த்தியின் மனத்தில் அந்தப் பெண், என்ன பெயர்? வேணி! தோன்றினாள்.

"எனக்கும் அப்படித்தான் இருக்கு" என்றான்.

அந்தப் பாவம் மெதுவாக வடிவெடுக்கத் தொடங்கியது. இப்போது கிடைக்காவிட்டாலென்ன, கிடைக்காமலா போய்விடுவாள்? இரண்டு வருஷம் இருக்கிறதே! முதல் காரியமாக அந்த வீட்டை ஏற்பாடு பண்ணவேண்டும். எப்போதோ சொல்லி வைத்திருந்தார்கள். அவர்கள் வேறு ஏற்பாடு எதுவும் செய்யாமல் இருக்க வேண்டும். சீக்கிரம் போய்ச் சந்திக்கலாம் உறவுக்காரர்களை.

"மாப்பிள்ளையைச் சரியாப் பார்த்தியாடி?"

"ம்."

"நிறம் கொஞ்சம் கம்மியில்லை?"

"எனக்குச் சேப்பா இருக்கிறவங்களைக் கண்டா பிடிக்காதும்மா."

"நீயே சேப்பு."

"அதனால்தான் சொல்றேன்."

"எனக்கென்னமோ நீ நிமிர்ந்து பார்த்தையா, இல்லையான்னு சந்தேகமா இருக்கு."

"பார்த்தேம்மா, நான் பார்த்ததை ஒருத்தரும் பார்த்திருக்க மாட்டாங்க."

"ஏன்னா! கூட வந்த பையன் கொஞ்சம் நல்லாவே இருந்தான் இல்லே?"

"ம், இப்ப அதைப் பற்றி என்ன பேச்சு?"

"ஏண்டி நீ அவனைப் பார்த்தியோ?"

"ம். பார்த்தேனம்மா. பிடிக்கலை."

"ஆத்ம சினேகிதனாம்."

"இருக்கலாம். அந்த ஆளுடைய பார்வை சரியில்லை."

"எல்லாத்தையும் ஒரு பார்வையிலே கிரகிச்சு வெச்சிருக்கா. எத்தனை பேரை வேண்டாம்னு சொல்லியாச்சு. நம்ம வீட்டுப் பொண்ணுக்கும் கல்யாணம் ஆகுமான்னு எனக்குக் கவலையாகக் கூட இருந்தது..."



"நான்தான் சொன்னேனேம்மா... எனக்கு ரொம்ப அழகா இருக்கறவங்களைக் கண்டா பிடிக்காதுன்னு."

"என்னவோ ஸைகாலஜி. இதப்பார் வேணி, அவர்கிட்ட நாம சம்மதம்ன்னு சொல்லியாச்சு. தெரியுமில்லை?"

"தெரியும்மா. எனக்குச் சம்மதம்தான்."

"நீ எப்படி ஜட்ஜ் பண்றேன்னு எனக்குப் பிடிபடவேயில்லை."

"கண்களைப் பாத்துப்பா."

"எனக்கென்னவோ அந்தப் பையன் சரிப் பட்டு வரும்னு தோணித்து. அவனுக்குக் கல்யாணம் ஆகலையாம்..."

"இப்ப அந்தப் பேச்சே வேண்டாம். ஜாதகம் எப்படிப் பொருந்தறது தெரியுமா? அவன் ஜாதகத்தையும் பாலு சார் அப்புறம் கொடுத்தார். அஷ்டமத்தில சனி."

"அதெல்லாம் ஒண்ணும் முக்கியமில்லையப்பா."

"பின்ன எது?"

"சொன்னேனே! எனக்கு இவர் – இவர் பேரு என்னப்பா?"

"அண்ணாசாமி... சாமின்னு கூப்பிடறா."

"சாமி... அவரைப் பார்த்ததும் தீர்மானமாயிடுச்சு அவர்தான்னு! அவரே உங்களை அந்தக் கேள்வி கேட்பார்னு. நிச்சயம் எதிர்பார்த்தேன்.

அவரோட நேரா பேசக்கூட தயாராயிருந்தேன். உறவுக்காரங்க ஏதாவது சொல்வாங்கன்னுதான் தயங்கிட்டேன்."

"டிகாஷனும் பாலும் போல இருப்பீங்க" என்று சிரித்தாள் அம்மா.

"காப்பி நல்லா வரும்மா."

"அப்படி ஒண்ணும் கருப்பு இல்லைடி."

"என்னப்பா அது? கருப்பு, வெளுப்பு, உயரம், குட்டை, அழகு இதெல்லாம் ரொம்ப superficial. நான் தேடினது எனக்குக் கிடைச்சுடுச்சப்பா."

"சந்தோஷம்."

"அவனுக்கு எவ்வளவு சம்பளம்?"

"இருக்கும் எழுநூறு ரூபா."

"சரியா கேட்டு வெச்சுக்க மாட்டீங்களா?"

"எல்லாம் போறும்மா. இல்லைன்னா நான் வேலைக்குப் போறேன். எனக்கு எல்லோரும் வேலை கொடுப்பாங்க சுலபமா."

வேணியின் குரலில் மெலிதான வெறுப்பு இருந்தது. அழகின் வெறுப்பு அது. பருவம் வந்த தேதியிலிருந்து சேர்த்துவைத்துக் கொண்ட வெறுப்பு. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நேரமும் தன்னைப் பார்த்த பார்வைகள், சொன்ன கொச்சை இச்சைகளில் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக்கொண்ட வெறுப்பு. சாமி! ஒரு கணம் அந்த முகம் அவள் நினைவில் தத்தளித்தது. நிமிர்ந்து பார்த்துவிட்டாள். அந்தக் கண்களை



நேராகச் சந்தித்துவிட்டாள். பெண்ணே, நான் அப்படிப்பட்டவன் இல்லை என்று சொன்ன கண்கள். அவள் தேடிக்கொண்டிருந்த ஒரே ஒரு பார்வை... அதை எப்படிச் சொல்வது. வார்த்தைகள் சுலபத்தில் சிக்கிவிடாத விஷயம் அது. அதன் மகத்துவம் மிகவும் அந்தரங்கமாக அவளுக்கு மட்டுமே தெரியும். எனக்கேற்றவன் அவன்தான் என்று சட்டென்று ஒரு மிக மிகக் கூர்மையான கத்தியின் ஒரே ஒரு வெட்டு போல் தெறித்த விடை. இவன்தான்.

வேணி அழகான பெண். அழகான பெண்களுக்கென்றே சில பிரத்தியேக அவஸ்தைகளைத் தினம் அனுபவித்தவள். சினிமா ஜோடிகளையும் விளம்பர 'மேட் பார் ஈச் அதர்'களையும் தொடர்கதை நாயக நாயகிகளையும் நிறைய பார்த்திடுவார்கள். அழகு, ஆணழகன், எப்பொழுதும் அவர்களுக்கென்றே ஒரு இன்ப சாம்ராஜ்யம் ரெடிமேடாகக் காத்திருக்கும். இருபத்தி நாலுமணி நேரமும் இன்பமும் சந்தோஷமும் அன்புடன் வாழும் அந்தப் புத்தகப் பொய்யை அடையாளம் கண்டுகொண்டுவிட்டாள். நிஜ உலகத்தில் அவள் சந்தித்த ஆண் பிள்ளைகள்:

கேஸ் நெம்பர் ஒன்று – முகுந்தன்: முப்பது கடிதங்கள் காவியங்களாக எழுதிவிட்டு... தனியாக ஒருமுறை சந்தித்தபோது முதல் காரியமாக மார்பில் கைவைத்த முகுந்தன்... அழகான பையன், நேராக அவனை முறைத்துப்

பொழுது கண்கள் சரிந்து அத்தனை அழகும் ஐஸ்கிரீம் போல உருகிப் போய்த் திடீரென்று குரூபியாகிவிட்ட முகுந்தன் முகத்தில் எச்சிலைத் துடைத்துக்கொண்டான்.

இரண்டு – வேணுகோபால்: நாளைக்கு நான் தனியா இருப்பேன். அல்ஜிப்ரா கற்க வருகிறாயா? சென்றாள். கற்றுத் தருவதற்குப் போய் ஆடையைப் பறித்தபோது "இதப் பாருங்க இப்ப நீங்க என்னைச் சுலபமா என்ன வேணும்னாலும் செய்துர முடியும். ஆனா விளைவை யோசிச்சுப் பாருங்க. நான் சத்தம் போட்டா என்னை உங்க வலிமையால் வாய் அடைச்சுடலாம். ஆனா சீக்கிரத்திலேயே நான் திரும்பப் போயிடுவேன். முதல் சந்தர்ப்பத்திலேயே உங்க மனைவிகிட்ட சொல்லிடுவேன். உங்க பத்து வயசுப் பெண்கிட்ட 'இதப்பாரும்மா உங்கப்பா என்ன செஞ்சார் தெரியுமா'ன்னு தெளிவாகத் தெளிவா கேட்டிடுவேன். அதுக்கு நீங்க தயாரா?"

மூன்று – சமையக்காரன் சிவசங்கரன்: "வேணியம்மா ஒரே ஒரு தடவை என்னை ஒரு விரலால் தொட்டுடுங்க. அதுபோதும் எனக்கு. என் வாழ்நாளுக்கு அதுபோதும்!"

மெல்ல அவன் கையைப் பற்றித் தன் பக்கமா எடுத்துச் சென்று அப்படியே திருப்பித் தோசைக் கல்லின்மேல்

"சொய்ய்ய் . . ."

"சிவு! பத்து வருஷமா சமையல் செய்ற



கையை இப்படியா சுட்டுப்பே!"

"கல்லு இவ்வளவு சூடுன்னு தெரியாமப் போச்சு பெரியம்மா."

கேஸ் நான்கு – ஆறுமுகம்: "சீ! படவா ராஸ்கல், இப்படி எட்டிப் பார்த்தியோ அடுத்த தடவை ஈர்க்குச்சி வெச்சு கண்ல குத்திடறேன் பாரு . . ."

ஐந்து – அம்பி: "உனக்கு வயசு பத்தாது. உனக்குப் புரியாத விஷயங்கள் எல்லாம் படிக்காதே. கன்னாபின்னா புஸ்தகங்களை எல்லாம் படிக்காதே. இப்ப அப்பாகிட்ட சொன்னா என்ன ஆகும் தெரியுமா? பின்னிப்பிடுவார்! இன்னொரு தடவை அது மாதிரி செய்யாதே. உதைச்சுடுவேன். "அழாதே அழாதேடா, பொட்டை மாதிரி அழாதே!" ஆறுதல் சொல்லிவிட்டு அப்பாவிடம் சொல்லிவிட்டாள்.

எத்தனை கண்கள்! எத்தனை பார்வைகள்!

முதல் தடவையாக வித்தியாசமான பார்வை. நேர்ப் பார்வை . . . பழுதற்ற பார்வை . . .

சாமி. நான் உன்னை – உங்களை விரும்புகிறேன். என் சகலத்தையும் உங்களுக்குத் தருகிறேன். நாம் இரண்டு பேரும் தவிர்க்க முடியாத உடற் சங்கமத்திற்கு அப்புறம், மிக அப்புறம் சந்தோஷமாக இருக்க முடியும் என்று என் உள்ளுணர்வு சொல்கிறது. என்னுடைய மதிப்பீடு தவறாக இருக்க முடியாது. நிறைய பார்த்துவிட்டேன்.

வேணி உற்சாகமாகப் பாடினாள்.

## 4. கடிதம்

மூர்த்தி எவ்வளவு நல்லவன்! இந்த உலகம் எனக்கு சந்தோஷம் தந்திருக்கிறது. மாமனாரிடமிருந்து கடிதம் வந்துவிட்டது. தை மாதம் ஆறாம் தேதி ஜனவரி இருபது கல்யாணம் நிச்சயம் பண்ணிச் சத்திரத்துக்கு அட்வான்ஸ் கொடுத்துவிட்டார்கள். செலவுகளைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் கடவுள் புண்ணியத்தில் என்னால் இந்தக் கல்யாணச் செலவுகளைச் சமாளிக்க முடியும் என்று தோன்றுகிறது. என்னதான் நீங்கள் செலவைப் பகிர்ந்துகொள்வதை நியாயப்படுத்தினாலும் பிற்பாடு சில சிக்கல்கள் ... உங்கள் உறவுக்காரர்களிடமிருந்தே வரலாம் என்றுதான் ...

அன்புள்ள மாமனாரே! உங்கள் பெண்ணுக்காக நான் என் உற்றார், உறவினர் எல்லோரையும் புறக்கணிக்கத் தயாராக இருக்கிறேன். உங்கள் பெண்ணை ஒரு பொக்கிஷம் போல் பாதுகாக்கிறேன். எனக்குக் கிடைத்த மற்றொரு பொக்கிஷம் மூர்த்தி. இனிய நண்பன். இனிய மனைவி. உலகத்தில் ஒருவனுக்கு வேறு என்ன வேண்டும்?

மூர்த்தியுடன் அந்த வீட்டைப் பார்க்கப் போயிருந்தான். அடேயப்பா! வாசல்புறம் தனியாக ஒரு அறை இருந்தது. அதில்தான் மூர்த்தி இருக்கப் போகிறான். அப்புறம் ஹால். இடது பக்கம் பெட்ரூம், டைனிங் ரூம். மற்றொரு



பெட்ரூம், சமையலறை, பூஜையறை பளபளன்னு மொஸைக்கு. என் திருமண வாழ்க்கை என்னும் சொர்க்கத்தின் ஆரம்ப சாம்ராஜ்யம். நான் என்ன தவம் செய்தேன். எனக்கு இப்படி ஒரு பவுசு கிடைக்க. பூர்வ ஜென்மபலன் என்கிறார்களே அது இதுதானோ? மூர்த்தி எல்லா விதத்திலும் உதவி செய்தான். ஸூட் தைப்பதற்குத் துணி தேர்ந்தெடுத்தான். நல்ல டெய்லரிடம் அழைத்துச் சென்றான். பத்திரிகை அச்சடிப்பதற்கு ஒத்தாசை செய்தான். மூர்த்தி, நீ இல்லைன்னா நான் எப்படி சமாளிச்சிருப்பேன்னு தெரியலை. தக்க சமயத்தில் வீடு ஏற்பாடு பண்ணிக் கொடுத்ததைச் சொல்லறதா ... இந்த மாதிரி ஒவ்வொரு கட்டத்திலும் எனக்கு உதவி செய்ததைச் சொல்லறதா? உன் கல்யாணத்துக்குகூட நீ இவ்வளவு தீவிரமாக ... சே, நான் என்ன சொல்லறேன் ... உன் கல்யாணத்தில் நான் இதுக்குமேல் ஓடியாடி உழைக்கப் போறேன் ... "மூர்த்தி நீ ஒரு ஜெம்" என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு தழுதழுத்தான். நீ எங்களோடேயே சாப்பிடலாம். என் வீடு உன் வீடு மாதிரி ... உனக்கும் சேர்த்துத்தான் தினசரி சமையல். நல்லா சமைப்பாளாம் தெரியுமா? அழகா இருக்கற பொண்ணு சமைக்க மாட்டாள்னு சொல்லுவாங்க. இவ நல்லாவே சமைப்பாளாம். கடுதாசி எழுதியிருக்கா ... நான் தைரியத்தை வரவழைச்சுண்டு ஒரு லெட்டர் எழுதிட்டேன் அவளுக்கு ... அதைத்

தப்பா நினைச்சுக்காம எக்ஸலண்ட்டா ஒரு லெட்டர் எழுதியிருக்கா தெரியுமா? வாசிக்கிறேன் கேளு."

"அநேக நமஸ்காரம். உங்கள் கடிதம் கிடைத்தது. நீங்கள் ஆரம்பத்தில் சொல்லியிருப்பது போல் அவ்வளவு பெரிய தப்பில்லை. உங்கள் கடிதத்தில் தப்பாக எதுவுமில்லை. வீடு கிடைத்து விட்டது பற்றி மிகவும் சந்தோஷம். எனக்கும் இதில் ஒரு பெரிய எதிர்பார்ப்பு இருக்கிறது. தினமும்... உடம்பைப் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் பொருளாதார விவரங்களை அறிந்து கொண்டேன். கவலைப்படாதீர்கள். உங்கள் சம்பளத்தில் என்னால் குடித்தனம் செய்ய இயலும் என்ற நம்பிக்கை இருக்கிறது. முடியவில்லை என்றால் எனக்கு வேலைக்குப் போகவும் சம்மதந்தான். ஜனவரி 20–க்காக நானும் காத்திருக்கிறேன் – பிரியமுள்ள வேணி."

"எழுத்து பார்த்தியா கண்ணுல ஒத்திக்கற மாதிரி." மூர்த்தி "ம்" என்றான். "நான் ஒரு ரூம்ல இருக்கப் போறதைப் பத்தி அவளுக்கு எழுதினயா?"

"இல்லை."

"ஏன்?"

"நீ யாருன்னு அவளுக்கு இன்னமும் தெரியாதே. நீ யாரு எனக்கு எப்பேர்ப்பட்ட நண்பன்னும் முதல்ல எழுதவேண்டாமே? வாசல் ரூம்ல என் ப்ரண்ட் ஒருத்தர் இருக்கப் போறார்ன்னு



மட்டும் எழுதினேன், அவ வந்தா உனக்கு ஃபார்மலா அறிமுகம் செஞ்சு வைச்சுட்டு உனக்கு விருந்து சாப்பாடு போட்டுட்டு சோளாவில்..."

மூர்த்தி மௌனமாக இருந்தான்.

"கல்யாணம் ஆனவுடன் பெங்களூர் போகப் போகிறோம். அங்கிருந்து மைசூர் பிருந்தாவன் கார்டன், அப்புறம் ஊட்டி எல்லா இடத்திலேயும் குளிருமில்லே... பரவாயில்லை. போய்ட்டு மாசக் கடைசியில திரும்பி வந்திடுவோம். அதுக்குள்ளே நீ மூவ் பண்ணிடலாம். எங்களை வரவேற்க நீ வீட்டில் இருந்தா எவ்வளவு சந்தோஷமா இருக்கும் தெரியுமா... என்ன சொல்லறே?"

"சரி" என்றான்.

"கல்யாணத்துக்குப் பதினெட்டு நாள் லீவு போட்டுட்டேன். நீ எப்ப வர்றே?"

"நான் முதல் நாள் வந்துடறேன்."

"அதுக்கு முன்னாடியே வரமுடியாதா?"

"பார்க்கலாம்."

"மூர்த்தி!"

"என்ன?"

"தாங்க்ஸ்."

"தாங்க்ஸ் எதுக்கு சாமி, எனக்கும் உனக்கும்..."

"என்ன? உனக்கும் கல்யாணம் நிச்சயம் ஆகப் போகிறதா. சொல்லிடு. ரெண்டு பேருமே ப்ளாட்டை ஷேர் பண்ணிக்கலாம். கவலைப் படாதே..."

"இல்லை. எனக்கு இப்ப இல்லை கல்யாணம்."

"ஏன் ?"

"இப்ப பண்ணிக்க இஷ்டமில்லை. பரீட்சை பாஸ் பண்ணிட்டுச் செய்துக்கலாம்ன்னு . . ."

"அதுக்கும் இதுக்கும் என்ன, யுமஸ்ட் மாரி மூர்த்தி."

"ஏற்கனவே கல்யாணம் ஆன மாதிரிப் பேசறியே."

"இன்னும் நாற்பது நாள். நாற்பது நாள் . . ."

இன்னும் நாற்பது நாள்தான். அதற்குள் ஏதாவது செய்யவேண்டும். நான் திட்டமிடுவது தப்பு. மஹா தப்பு. பாவம். குற்றம். பெரிய குற்றம். கோயிலுக்குப் போய்க் குளித்துவிட்டு திருநீறு அணிந்து சேவித்து மனசுக்குள் மூன்று மணி நேரம் மன்னிப்பு கேட்க வேண்டும். சே! நினைக்காதே. அதைப்பற்றி நினைக்காதே, அதைப் பற்றி நினைக்கவே நினைக்காதே.

நினைப்பதில்லை என்று தீர்மானித்த விஷயத்தில்தான் மனசு திரும்பத் திரும்ப லயித்தது. ஆரம்ப காலத்தில் எந்தவித சந்தேகமும் ஏற்படுத்தக்கூடாது. எச்சரிக்கை. அவர்களைத் திரும்பிக் கூட பார்க்கக்கூடாது. தான் உண்டு. தன் காரியம் உண்டு. இவர்களுடன் சாப்பிடக் கூடாது. ஓட்டலில்தான் சாப்பிட வேண்டும். தனியாக அவளுடன் இருக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தக் கூடாது. முதலில் விட்டுப்பிடிக்க வேண்டும். அப்புறம் அப்புறம்தான் . . .



அந்தத் திட்டத்தில் முதல் கட்டம் . . . முதன் முதலில் . . . பேப்பரில் ஒரு விளம்பரம். அது மூர்த்தியின் மனத்தில் தெளிவாக இருந்தது.

அப்படி நினைக்காதே என்று எத்தனை தடவை சொல்வது. தப்புடா தப்பு.

இவனுக்குப் போய் இப்படி ஒரு மனைவியா?

மூர்த்தி! உதவாது, உருப்படமாட்டாய். மஹா பாவம். முதலில் விளம்பரம். அப்புறம், விலகு சைத்தான் விலகு . . . விளம்பரத்தை அவர்கள் பார்க்கவில்லையென்றால் . . .

பார்க்க வைத்துவிடலாம். திட்டத்தின் முதல் அங்கம் விளம்பரம். நிதானமாகச் செயல்படும். ஒன்றும் அவசரம் வேண்டாம். நாற்பது நாட்கள் இருக்கின்றன. நாற்பது முழுசான நாட்கள். நினைக்காதே. மஹா பாவம் துரோகம்.

## 5. திருமணம்

அமைதியான திருமணம். சாமியின் தரப்பிலிருந்து அப்பா, அம்மா, அக்கா, சித்தி குடும்பத்தினர் எல்லோரும் ஸ்பெஷல் பஸ்ஸில் குதூகலமாய் வந்தார்கள்.

"சாமி பொண்ணு ரொம்ப அழகாமே!"

"திருஷ்டி சுத்திப் போடணும்."

"ஏண்டா சாமி ஒரு மாதிரி இருக்கே?"

"ஒண்ணுமில்லே சித்தி. என் டியர் ப்ரெண்டு

ஒருத்தன் வரணும். இன்னமும் வரலை."

"மூர்த்தி தானே. வந்துருவாண்டா! வராம எங்க போறான்."

"அவன்தான் வீடு பார்த்துக் கொடுத்தானாமே?"

"ஆமாம் அந்தப் பிள்ளை ரொம்ப ஒத்தாசை."

"வராமப் போயிடுவானோ, பார்க்கிறேன். ஆபீஸ்ல பிடி பிடிச்சுடுவேன்."

"வந்துருவாண்டா."

காரில் ஜானவாசம் போய்வந்து பெண் வர காத்திருந்தபோது, அவன் கண்கள் மூர்த்தியைத் தேடின. ஏன் இன்னமும் வரலை? ஆபீஸ்ல ஏதாவது அவசரமாக டூர் போகச் சொல்லிட்டாளோ? இருக்காதே! ஆடிட் சமயம் இது... பின்ன ஏன் வரலை?

"பெண்ணைக் கூட்டிண்டு வாங்கோ!"

பெண் வந்ததும் சர்வமும் மறந்துவிட்டது. பிரமிப்பில் ஆழ்ந்து விட்டான். என் அருகில் பவ்யமாக உட்கார்ந்திருக்கிறாளே இவள். நிஜம் தான். நிச்சயம் கனவல்ல. இதோ என்மேல் மெலிதாகப்படுகிறாள். அதிகாலை இவளுக்குத் தாலி கட்டப் போகிறேன். ஊர்ஜிதம் அவள் விரல் மோதிரம் தெரிந்தது. காலின் ஓரத்தில் சிவப்பு தெரிந்தது. நிமிர்ந்து திரும்பிப் பார்க்கத் தயக்கமாக இருந்தது. ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் "உன் கையெழுத்துக்கூட அழகாக இருக்கு" என்றான். ஒரே ஒரு புன்னகை.



"பேசேன்" என்றான்.

"நாளைக்கு" என்று ஒரே ஒரு வார்த்தை. போதும். இராப்பூரா பத்திரப்படுத்தி யோசித்துப் பார்க்க இந்த ஒரு வார்த்தை போதும். 'நாளைக்கு' யார் வந்தா என்ன வராவிட்டால் என்ன? எனது சொந்த சொர்க்கம் சாஸ்வதப் படுத்தப்பட்டுவிட்டது. இனி இவளுக்காக நான் எப்பொழுதும் அடிமையாகிவிடுவேன். நில் என்றால் நிற்பேன். நட என்றால் நடப்பேன். மூர்த்தி ஏன் இன்னமும் வரலை? காலை வருகிறானோ என்னவோ? பரவாயில்லை. ஏதாவது முக்கிய காரணம் இருக்கும். இல்லா விட்டால்கூட எனக்கென்ன? வேணி. இனி முழுவதும் இவள்தான் ஆக்கிரமிக்கப் போகிறாள்.

அதிகாலை எழுந்து குளித்து சங்கல்பம் செய்துகொண்டு வேஷ்டி கட்டிக்கொண்டு மார்பைப் போர்த்திக்கொண்டு நெருப்பின் முன் அவள் கையைத் தொட்டபோது மெலிதாக இருந்தது. ஒரு சின்ன அறியாத புஷ்பம் போல ஒரு பூனைக் குட்டி போல... மெத்மெத் தென்ற கை. அதை ஒரு தடவை அழுத்தி விட்டான். "ஸ்ஸ்" என்றாள். ஆயிரம் ஸாரி சொல்லிக் கொண்டான். தன் கைக்கும் அவள் கைக்கும் இருந்த வித்தியாசம் அவனைத் தாக்கி யது. எல்லோரும் பார்க்கிறார்கள். எதிர் எதிரே அவள் முன் நிற்க அவள் கண்களை ஒரு முறை சந்தித்ததில் அந்த மூக்கு உதடு உதட்டின்

மேல் மெலிதான வியர்வை... மறுபடி அந்தக் கண்கள். சற்றே தாழ்ந்த பார்வை ... அவளுடைய மிச்சத்தைப் பார்க்கத் தயக்கமாக இருந்தது. காத்திரு ... காத்திரு ... ராத்திரிக்குக் காத்திரு ...

மாங்கல்யம், ஆசீர்வாதத்திற்கு மெல்ல பந்தலில் நகர்ந்துகொண்டிருந்தது. முகூர்த்த வேளை நெருங்கியது. மூர்த்தி இன்னமும் வர வில்லை. இனி வரமாட்டான் என்றுதான் தோன்றுகிறது. ஏன்?

அப்பாவின் மடியில் அவள் உட்கார்ந்திருக்க போட்டோக்காரரும் சாஸ்திரிகளும் போட்டியிட பட்டுப்புடவைகள் கிட்டே நெருங்க கெட்டி மேளம் தட்டப்பட . . .

ஆஹா இவள் கழுத்து எவ்வளவு அழகு!

கல்யாணம் முடிந்தது. விருந்து முடிந்தது. மத்தியானம், மறுபடி ஸூட், சாயங்காலம் ரிஸப்ஷன் ... லோக்கல் பாட்டுக் கச்சேரி முடிந்து மிருதங்கத்துக்கு உறைபோட்ட பின்னும்கூட மூர்த்தி வரவில்லை. அப்புறம் மூர்த்தியை மறந்துவிட்டான்.

## 6. ஹனிமூன்

“இந்தா” என்றாள் அம்மா. அவள் கையில் ஒரு வாயல் புடவை. “இதை உள்ளே போனதும் மாத்திண்டுடு.”



உள்ளே சென்றாள். கதவைத் தாளிடும்போது சற்று விரசமாக உணர்ந்தாள். வெளியே எல்லோரும் இருக்கிறார்கள் . . .திரும்பினாள்.

நின்றுகொண்டிருந்தான்.

நேராக நடந்து சென்றாள்.

இன்னும் நின்றுகொண்டிருந்தான். நிமிர்ந்தாள். சிரித்தாள்.

“உட்காருங்க” என்றாள்.

அவன் தன் உணர்வுடன் ஓரத்தில் உட்கார்ந்தான்.

“சரியா.”

சரியாக உட்கார்ந்தான்

“என்னைப் பிடிச்சிருக்கா உங்களுக்கு?”

“அப் . . .பா!” என்றான்.

“அப்பான்னா?”

“எனக்குச் சொல்ல வரலை.”

“என் பேர் என்ன சொல்லுங்கோ?”

“வேணி!”

“நல்லால்லை. இல்லை?”

“சேச்சே! ப்யூட்டிஃபுல் நேம். என் பேர்தான் ரொம்ப மோசம். அண்ணாசாமி! என்ன ஒரு கர்நாடகமான பேர். ஏன்தான் இந்தப் பேரை வெச்சாங்களோ? சாமின்னு கூப்பிடு. அது கொஞ்சம் பரவாயில்லை.”

“நான் பேர் சொல்லி உங்களைக் கூப்பிட

மாட்டேன்."

"பின்ன எப்படி?"

"ஏ மிஸ்டர்ன்னு கூப்பிடட்டுமா?"

"சரி."

"அது நல்லாயிருக்காது. இந்தாங்கன்னு கூப்பிட்டா அதுவும் சரியில்லை. ஏன்னான்னு கூப்பிடலாம். ப்ச்! சாமியே பரவாயில்லை. ஆனா புருஷன் பேர் சொல்லிக் கூப்பிட றதா?...செல்லப் பேர் எதுவும் கிடையாதா உங்களுக்கு?"

"இருக்கு... சின்ன வயசில் இருந்து சீமான்னு கூப்பிடுவா எங்க அப்பா மட்டும்."

"சீமா! தட்ஸ் இட். டியர் சீமா என்னைப் பாருங்க..."

பார்த்தான்.

"நிமிர்ந்து பாருங்க."

"நீ ரொம்ப அழகா இருக்கே."

"அப்புறம்..."

"நீ ரொம்ப அழகா இருக்கே."

"தொட்டுப் பாருங்க."

"ஸாப்டா இருக்கு."

"இங்க தொட்டுப் பாருங்க."

"மெத்துன்னு இருக்கே."

"அப்புறம் இங்கே."

"சூடா இருக்கே."



"இந்த இடத்தில்..."

"சிவப்பா இருக்கே."

"இப்ப..."

"சொல்ல மாட்டேன்."

"இது என்ன?"

"சொல்ல மாட்டேன்."

"உங்களுக்குப் பிடிச்ச புத்தகம் எது?"

"வேணி."

"படிங்க."

முதலில் அட்டைப்படத்தைப் பார்த்தான். பிரித்தான். பொருள் அடக்கத்தைத் தேடினான். முதல் அத்தியாயத்தில் ஆரம்பித்தான். ஓவியங் களை ரசித்தான். கவிதைகளைத் தொட்டான். வார்த்தைகள், இடைவெளிகள், இடைச் செரு கல்கள்.

படித்து முடித்துவிட்டு பக்கத்தில் படுத்திருக் கும்போது "வேணி, உன்னை ஒண்ணு கேக்க ணும்" என்றான்.

"தெரியும். என்னை நீ மனப்பூர்வமாக சம்ம திச்சுக் கல்யாணம்... அதானே கேள்வி?"

"ஆமாம்."

"இந்த சந்தேகம் வரக்கூடாது உங்களுக்கு... நான் ஏன் சம்மதிச்சேன்னு காரணத்தைச் சொன்னா உங்களுக்குத் தெளிவாய்டும்." உங்க கண்ல இருந்த, 'இன்னொசன்ஸ்' அதுதான் என்னைத் தீர்மானிக்க வைச்சது" என்றாள்.

"எனக்கு நம்ப முடியலை வேணி, இப்பக்கூட கிள்ளி கிள்ளிப் பாத்துக்கறேன். சொப்பனமா, நிஜமா, எனக்குப் போய் இவ்வளவு அதிர்ஷ்டமா, இவ்வளவு அழகான மனைவியா, நான் என்ன தவம் செஞ்சேன். பைதிவே எனக்கு ரெண்டு விதத்திலே அதிர்ஷ்டம். ஒண்ணு நீ. பின்னது மூர்த்தி, எவ்வளவு ஹெல்ப் பண்ணான் தெரியுமா? என்ன ஆச்சோ அவனுக்குன்னு கவலையாகூட இருக்குது. கல்யாணத்துக்கு வரலை ..."

"மூர்த்தி யாரு ... உங்க கூட பெண் பார்க்க வந்திருந்தாரே அவரா?"

"ஆமாம். அவன்தான், அவன்தான் வீடும் பார்த்துக் கொடுத்திருக்கான்."

"அந்த வீட்டில் முன் ரூம்லே தங்கப் போறார்னு எழுதியிருந்தீர்களே ... அவர்தானா?"

"ஆமாம்."

வேணி மௌனமானாள். அவளுக்குள் சற்று அச்சம், கலவரம் ஏற்பட்டது

"ஜெம் ஆஃப் எ மேன். கல்யாண ஏற்பாட்டுக்கெல்லாம் எத்தனை உதவி செய்தான் தெரியுமா? ஸுட் தைக்கிறதிலேயிருந்து ஆரம்பிச்சு. ரேஷன் கார்ட், கேஸ், பால் கூப்பன் ... அப்புறம் எல்லாத்துக்கும் சிகரம் வைச்சாப்பிலே இந்த வீடு ... நான் ரொம்ப அதிர்ஷ்டக்காரன்."

'கல்யாண ஏற்பாடுகளுக்கு ஒத்தாசை செய்கிறார் என்றால் ... நல்ல எண்ணமுடையவராகத் தான் இருக்க வேண்டும். சே, இதென்ன பயம்.'



"மூர்த்தியை நீ பார்த்தியே அன்னிக்கு?"

"ம்."

"வேணி ... கிருஷ்ணவேணி!" என்று உச்சரித்துப் பார்த்துக் கொண்டான்.

"உனக்கு ஆட்சேபணை இல்லைன்னா, இன்னொரு தடவை உன்னைத் தொடட்டுமா?"

"தாராளமா. இதுக்கு நீங்க பர்மிஷன் கேட்க வேண்டாம்."

"உன் இஷ்டம் இல்லாம நான் ஒண்ணுமே செய்யமாட்டேன்."

"இந்த விஷயத்தில் என் இஷ்டத்தை சீசன் பாஸ் மாதிரி உங்களுக்குக் கொடுத்தாச்சி – வாங்க ஊருக்குப் போகலாம் ..."

ஊர் தூரத்தில் மலையுச்சியில் மரகதப் பச்சை வயல்களுக்குப் பின் தெரிந்த தங்கத் தகதகப்பு. அதை நோக்கி இருவரும் ஓடினார்கள். ஒருவருக்கொருவர் தொட்டுக்கொண்டு, அப்புறம் ஒட்டிக்கொண்டு, பின்னிக்கொண்டு இப்போது வேகமாக, அதிவேகமாக அந்தத் தங்க வெள்ளத்தை அடைந்து ஒரு கணம் அவர்கள் இருவருக்குள்ளேயும் குபுக் என்று ஒரு வேதனைப் பந்து வெடித்து உடனே உடம்பெல்லாம் ஆக்ரமித்து – ஊடுருவி ..

அப்பாடா!

வேணி அவனைத் திருப்பினாள்.

"இப்ப சொல்லுங்க."

"என்ன ?"

"இப்ப என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா ?"

"ஜாஸ்தி, முன்னைவிட ஜாஸ்தியா !"

அங்கிருந்து ரயிலேறி பங்களூர் சென்றார்கள். பரிச்சயமில்லாத குளிருக்குப் புதிதாக ஸ்வெட்டர் வாங்கினார்கள். ஒரே படுக்கையில், ஒரே போர்வையில் உறங்கினார்கள். மலர்களின் உள்ளே நடக்கும் போது எதிர்ப்படுபவர்கள் எல்லோரும் ஒரு முறை வேணியைத் திரும்பிப் பார்ப்பதை உணர்ந்து அவன் மிகவும் பெருமைப் பட்டான். இவள் என்னுடையவள் என்று அவள்மேல் பட்டு இடித்துக்கொண்டு சென் றான். எப்போதும் அவளைத் தொட்டுக்கொண் டிருந்தான். அவளும் சற்று அலுப்போ சங்க டமோ காண்பிக்காமல் அவனைப் பார்த்தபோ தெல்லாம் புன்சிரிப்பாக இருந்தாள். அவள் படிக்கிற புத்தகங்கள் எல்லாம் அவனுக்குப் பிரமிப்பாக இருந்தன. தானும் எல்லா வாரப் பத்திரிகைகளிலிருந்து முன்னேறி அவளைப் போல சற்றுத் தீவிரமாகப் புத்தகங்கள் படிக்க ஆரம்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தான். புரியவில்லை என்றால் அவளை அர்த்தம் கேட்க வேண்டும். பாசாங்கு எதுவும் இன்றி அவளிடம் ஒரு பொய் சொல்லாமல் திறந்த, மிகத் திறந்த மனத்துடன் அவளிடம் பழக வேண்டும். இந்தக் குறைந்த தினங்களில் இவள்



எத்தனை தந்திருக்கிறாள். ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக இவளிடம் இன்பங்கள் மகிழ்ச்சிக் கணங்கள் இருக்கின்றன.

பங்களூர், மைசூர், ஊட்டி என்று ஊர் ஊராகச் சென்றாலும் அந்த நகரங்களின் அழகு அவனுக்குப் பெரிதாகப் படவில்லை. படகுப் பிரயாணங்களில், மலர்ப் படுக்கைகளில், பச்சைப் புல்வெளியில், மஞ்சள் படிந்த வானத்தில் இருக்கும் உற்சாகங்களைவிட அவளை அவ ளையே கண்கொட்டாமல் பார்ப்பதில் இருந்தது.

"இந்த ஹனிமூன் டேஸ்ட் எப்பப் பார்த் தாலும் உன்னையே பார்த்துகிட்டு இருக்கிற துதான், உன்னை என் கண் முன்னாலே இருந்து ஒரு க்ஷணம் தப்பிக்க விடப் போறதில்லை . . ."

"தப்பிச்சுத்தான் ஆகணும்."

"ஏன் ?"

"வேலைக்குப் போகணும் இல்லை திரும்ப ஊருக்குப் போகணும்."

"உங்களுக்கு இருக்கிற உத்வேகத்தைப் பார்த்தா உடனே என்னை கர்ப்பமாக்கிட்டுத் தான் மறுகாரியம் பார்ப்பீங்க போல."

"சே, உன் விருப்பம் இல்லாம நான் ஒண்ணு செய்வேனா ?"

"என் விருப்பமும் இதில் இருக்கிறதினால் தான் கவலை."

"வேண்டாம் நமக்குக் குழந்தையே வேண்டாம்,

நமக்கு இடையில் எதுவும் வேண்டாம்."

"எனக்கு எட்டுக் குழந்தை வேணும்."

"எல்லாம் பெண்."

"சரிதான். உங்களுக்கு இருக்கிற தலை மயிரெல்லாம் முப்பதுக்குள்ள உதிரணுமா?"

சின்னச் சின்னதாக எதிர்காலக் கனவுகள் கண்டார்கள். ஒரு ரேடியோ வாங்க வேண்டும். முடிந்தால் ஸ்டீரியோ டெலிவிஷன். என்ன விலை இருக்கும்? மிக்சி. ஒரு நாள் நான், ஒரு நாள் நீ என்று சமையல் செய்யலாம். எல்லா சிரமங்களையும் பங்கு போட்டுக்கொள்ள வேண்டும். ஆண்தான் உயர்வு என்று எந்த மடையன் சொன்னது? "வேணி! நீ வேலைக்குப் போக வேண்டும் என்றால் நான் தடுக்க மாட்டேன்."

"எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. முதலில் ஓரிரண்டு வருஷம். குழந்தை பிறக்கும் வரை வேலைக்குப் போகப் போகிறேன். காசு பணம் சேர்த்துக்கொள்ளலாம். அப்புறம் ரிஸக்னேஷன், குழந்தை எல்லாம் பார்த்துக் கொள்ளலாம்."

"உன் இஷ்டம் வேணி!"

அவர்கள் எதிர்காலத்தை அந்த நிமிஷத்தில் மூர்த்தி தீர்மானித்துக் கொண்டிருந்தான்.



## 7. மூர்த்தி

மூர்த்தி எதிலுமே தயங்குபவன். இந்தத் தயக்கம் அவன் கூடப்பிறந்த குணம். இன்று ஷேவ் பண்ணலாமா வேண்டாமா என்பதிலிருந்து ஆரம்பித்து, ஒரு சிகரெட் பிடிக்கலாமா, ஒரு காப்பி சாப்பிடலாமா, பஸ்ஸுக்கு நிற்கலாமா? இதுபோன்ற தினவாழ்க்கையின் சாதாரணத் தீர்மானங்களில்கூட ஒவ்வொரு முறையும் தயங்குவான். மூர்த்தியின் சிறு வயதைப் பற்றி கொஞ்சம் பேசலாம். பிறந்த உடனே அவன் தாயார் இறந்து போனாள் ... அவன் அப்பா உடனே மறு கல்யாணம் செய்யாததால் வீட்டு வேலைக்காரி ஒருத்தி அவனை வளர்த்திருக்கிறாள். ஒரு வயசில் பல நாள் இரவு பூரா யாருமே கவனிக்காமல் அழுதிருக்கிறான். நவீன மனோதத்துவர்கள் ஒரு குழந்தையின் மன அமைப்பு, குணாதிசயங்கள் எல்லாமே அதன் முதல் மூன்று வருஷங்களில் தீர்மானிக்கப் பட்டுவிடுகின்றன என்று சொல்கிறார்கள். அது சரியென்றால் மூர்த்தியின் முதல் மூன்று வருஷங்களில் கீழ்வரும் சம்பவங்கள் நிச்சயம் அவன் மனத்தை பாதித்திருக்க வேண்டும்.

ஒரு தடவை அப்பா அவன் அழுகையைத் தாங்க முடியாமல் அப்படியே கண்களில் தீயெழ விழித்து, குழந்தையை ஒரு கணம் மூச்சுத் திணற அழுத்தியது. ஒரு தடவை படுக்கையில் குழந்தையை மூன்றடி தூக்கி தொப் என்று

ஆத்திரத்தில் எறிந்தது. ஒரு தடவை தாங்க முடியாமல் குழந்தையை அறைந்தது.

அப்புறம் அந்த சித்தி என்பவள் சின்ன வயசில் அடிக்கடி தனியே அழைத்துச்சென்று துடையில் கிள்ளியது. கரண்டியால் லொட், லொட்டென்று தலையில் அடித்தது. எல்லாமே மூர்த்தியின் மனத்தை ஒரு விதத்தில் சேதப்படுத்தித்தான் இருக்க வேண்டும். இந்த சேதங்களில் ஒட்டுமொத்தமான இன்றைய மூர்த்தி ஒரு இன்ட்ரோவெர்ட். பெண்களைக் கண்டால் ஒரு வித விருப்பு, வெறுப்பு, உணர்ச்சி உண்டாகும். ஒரு சமயம் தெருவில் போகிற ஒவ்வொருத்தியும் அழகாக இருப்பது போல இருக்கும். சில சமயம் எல்லோரையும் மொத்தமாகக் கழுத்தை நெரித்துவிட வேண்டும் போலிருக்கும். மூர்த்திக்குத் தன்னிரக்கமும் நிறைய உண்டு. சந்தர்ப்பமும், வசதியும் இருந்தால்தான் எத்தனையோ முன்னுக்கு வரக் கூடியவன் என்பது அவன் கொள்கை.

இப்படி நானூறு ரூபாய்க்கு லாந்திக்கொண்டிருக்கமாட்டான். என் அம்மாவும் உயிருடன் இருந்து, அப்பா சரியாக, அன்பாக, அக்கறையாக இருந்திருந்தால் நான் ஐ.ஏ.எஸ். என்ன, வெளிநாடு சென்று படித்திருக்க முடியும். படித்தது என்ன, பாழும் பி. எஸ்.சி. இரண்டாம் வகுப்பு. வேலை கிடைத்ததே பிரம்ம பிரயத்தனம். எல்லோரும் கல்யாணம் செய்துகொண்டு சந்



தோஷமாக இருக்கிறார்கள். என் கல்யாணத்தைப் பற்றி அப்பாவோ சித்தியோ பேசுவதே இல்லை. இந்த சாமிக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார். என்ன ஒரு அநியாயம். எனக்காக வந்த பெண். இந்தக் கருப்பண்ணா சாமியிடம் சிக்கி விட்டாள். இதுதான் கொடுமை, அநீதி. அநீதி ஏற்பட்டால் அந்த விதியோ, கடவுளோ, நிவர்த்திக்கவில்லை என்றால் மனித இனம் பார்த்து நிவர்த்திக்க வேண்டியது கடமை. எனக்குக் கிடைக்க வேண்டியவளை மற்றொருவன் ... நான் திரும்ப அவளைப் பெறுவதுதானே நியாயம். இப்படி விநோதமான தீர்க்கத்தில் தான் செய்யப்போவற்கு சப்பைக்கட்டுகள் தேடிக் கொண்டிருந்தான் மூர்த்தி.

ஒரு சில நடத்தைகளில் மூர்த்தி பைத்தியம். பாயைப் பிராண்டுகிற – அடிக்கடி சிரிக்கிற ஆஸ்பத்திரி பைத்தியமில்லை. இது ஒரு மெலிதான வகை. இன்ஜினுக்குள் நீராவி மாதிரி உள்ளே மிக உள்ளே குமைந்து கிடக்கிற பைத்தியம். வெளிப்புறத்திற்கு அவன் ஒரு கிளார்க். நண்பன், ஒட்டுள்ள பிரஜை. சமூக நியதிகள் அத்தனைக்கும் உட்பட்டவன். உள்ளே ஒரு டைம்பாம். தீ பற்ற வைக்கப்பட்டது. வெடிக்கப் போகிறது.

மூர்த்தி தெளிவாகவே சிந்தித்தான். ஆரம்பத்தில் எந்தவித சந்தேகமும் ஏற்படாமல் நடந்து கொள்ள வேண்டும். காத்திருக்க வேண்டும்.

சந்தர்ப்பம் வராமலா போய்விடும்? வரட்டும், வரட்டும் என்று காத்திருந்தான். கல்யாணத்துக்குப் போகவில்லை, இஷ்டமில்லை. வந்தவுடன் சாமி கோபித்துக்கொள்வான். உடம்பு சரி யில்லை என்று சொல்லிவிடலாம். உடம்பு சரியில்லை என்றால் அவன் மேற்கொண்டு விசாரிப்பானா? எதற்கும் ஒன்றிரண்டு மாத்திரைகள் வாங்கி அலமாரியில் வைத்துவிடலாம். அவன் பார்க்கும்படியாக... அந்தப் பெண்ணை நிமிர்ந்துகூட பார்க்கக் கூடாது. அப்புறம் அவளைப் பார்க்கலாம். அங்கம் அங்கமாக– ஏன்? ஒன்றிரண்டு இடங்களில் கீறிக்கூட பார்க்கலாம் உள்ளே எப்படி இருக்கிறாள். என்று கீறிப் பார்த்துவிட்டு அப்புறம் அவளை...

மூர்த்தி சுத்தமாகக் குளித்திருந்தான். ஃப்ளாட்டைச் சுத்தமாகக் கழுவி, சாமிப் படம் மாட்டி ஊதுபத்தி ஏற்றி தயாராக வைத்திருந்தான். முன் அறையில் தன் சாமான்கள் அத்தனையும் ஒழுங்காக அடுக்கி வைத்தான். நல்ல சலவை ஷர்ட் அணிந்து தலைவாரி நெற்றியில் ஒரு குங்குமப் பொட்டும் ஒரு விரல் விபூதியும் இட்டிருந்தான். இன்றைக்குத்தான் ரெண்டு பேரும் ஹனிமூனிலிருந்து திரும்பி வருகிறார்கள். டாக்ஸி சத்தம் கேட்டது.

வாசலுக்குச் சென்றான்.

“வாங்க வாங்க. என்ன சாமி டிரெய்ன் லேட்டா? ஆறு மணிக்கு அரைவ் போட்டிருந்தானே.”



“இல்லை. வர்ற வழியில் காபி, டிபன் சாப்பிட்டு வந்தோம்.”

“அடடா! நான் உங்களுக்கு காபி போட்டு வைச்சிருக்கேனே.”

“பார்த்தியா வேணி! மூர்த்தி எப்படிப்பட்ட ஃபிரண்ட்!”

“பரவாயில்லை. சுட வைச்சு இன்னொரு தடவை சாப்பிடலாம்” என்றாள் வேணி. மூர்த்தி அவளைப் பார்க்கவே இல்லை. அன்றைக்குப் பெண் பார்க்க வந்தபோது அவள் கண்களைச் சந்தித்ததுதான்.

“வென்னீர் போட்டிருக்கேன். கிச்சன்ல ஸ்டவ்வுக்கு எண்ணெய் போட்டிருக்கிறேன்.”

“நாங்க இப்ப குக் பண்றதா இல்லை மூர்த்தி.”

“அப்படியா! ஆபீஸ் வரியா இன்னிக்கு?”

“நான் திங்கக்கிழமைதானே ஜாயின் பண்ணணும்.”

“ஓ, மறந்துவிட்டேன். நான் கிளம்பறேன்.”

“ஏய் பாவி! ஏண்டா கல்யாணத்துக்கு வரலை?”

“உடம்பு சரியில்லை. அப்புறம் விவரமா சொல்றேன்.”

மூர்த்தி தன் அறைக்கு வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான். அத்துடன் ஒட்டியிருந்த பாத்ரூமுக்குச் சென்றான். அறையிலிருந்து ஒரு ஸ்டூல் கொண்டுவந்து அதன் மேல் நின்

றான். சுவற்றில் மிக சாமர்த்தியமாக அமைக்கப் பட்ட சன்னமான இடைவெளியில் கண் வைத்தான். அந்த பெட்ரூம் தெரிந்தது. அதனுள் வேணி வருவதும், அவள் பின் சாமி வருவதும் தெரிந்தது.

வேணியை மிக நன்றாக தரிசித்தான்.

என்ன உடம்பு, என்ன மார்பு, இலை போன்று வயிறு. பாதங்கள் திரும்பும்போது தெரியும் இடுப்பு. சாமி! சாமி அவள் உடையைக் களை யேண்டா, ஏன் நிற்கிறாய்?

"பார்த்தியா வேணி என் ஃப்ரெண்ட் எவ்வ ளவு நல்லவன், பார்த்தியா? என்ன ஒரு பவ்ய மான ஆசாமி, என்ன நடத்தை!"

"ஆமாங்க."

சாமி அவள் கையைப் பிடித்தான். கமான் சாமி! ஏதாவது செய்! அவள் மேலாடையைக் கைப்பற்றினான். ஒரு நிமிஷம் அவள் மார்பின் ஏற்ற இறக்கம் தென்பட்டது. அவள் உடனே தன் புடவைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு "ம்ஹூம் வேண்டாம். அவசரமில்லே. அவர் ஆபீஸ் போகட்டும்" என்றாள்.

அவர்கள் விலகிவிட, மூர்த்தி ஸ்டூலிலிருந்து இறங்கி யோசித்தான். ஆபீஸ் போகிறது போல் கிளம்பி திரும்ப அறைக்கு ஓசைப்படாமல் வந்து விட ஒரு வழி பண்ண வேண்டும். அவன் உடம்பு ஜுரம் வந்தாற்போல் இருந்தது. 'என்ன ஒரு உடம்பு. எனக்குக் கிடைத்திருக்க வேண்டிய



உடம்பு!'

சே, என் திட்டத்தை நிறைவேற்றியே தீர வேண்டும் இனி தயங்கக் கூடாது.

மூர்த்தி சட்டை பேண்ட் மாட்டிக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

"நான் ஆபீஸ் போறேன் சாமி. ஏதாவது வாங்கிட்டு வரணும்னா சொல்லு."

"வேண்டாம் மூர்த்தி. தாங்க்ஸ்."

"ராத்திரி நான் திரும்பி வர நேரமாகும்."

"சரி."

"பீல் அட் ஹோம். என்னை எதுவும் கேட்கற துக்குத் தயங்க வேண்டாம்."

"தாங்க்ஸ், மூர்த்தி."

மூர்த்தி வெளியே வந்தான். கைக்கடியா ரத்தைப் பார்த்தான். மணி ஒன்பது. பத்து மணிக்கு ஆபீஸ். பத்திரிகை ஆபீஸ் இப்போது திறந்திருக்குமோ? போய்ப் பார்க்கலாம்.

திறந்திருந்தது.

"என்ன சார், வேணும்?"

"வரி விளம்பரம் கொடுக்கணும்."

"எழுதிக் கொடுங்க."

சுற்றிலும் பார்த்தான். தெரியாத முகங்கள் தான். மை படிந்த மேஜைக்குச் சென்று அந்த பாரத்தில் எழுதினான்.

சென்னையை அடுத்த புறநகர் பகுதியில்

தொழிற்சாலைக்கு உரிய சிறிய கொடவுன் இடம் தேவை. மருந்துப் பெட்டிகள் அடுக்குவதற்கு. இடம் பொருத்தமாக இருந்தால் நல்ல வாடகை. தபால் பெட்டி எண் . . .க்கு விண்ணப்பிக்கவும்.

அந்த ஆள் வார்த்தைகளை எண்ணிக் கொண்டே . . .

"பாக்டரி வைச்சிருக்கீங்களா?"

"வைக்கப்போறேன்."

"என் மச்சானுக்கு ஒரு வேலை . . ."

"பார்க்கலாம். இன்னும் ஆரம்பிக்கவே இல்லை."

"எண்பத்தி ஆறு ரூபாய் கொடுங்க."

எடுத்துக் கொடுத்தான். அவன் பையில் பல நூறு ரூபாய் நோட்டுகள் தென்பட்டன. சமீபத்தில் பிராவிடண்ட் பண்டிலேயிருந்து கடன் வாங்கியிருக்கிறான்.

விளம்பரத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டு மூர்த்தி ஆபீஸ் சென்றான். இது முதல். இன்னும் கொஞ்ச நாள் கழித்து மற்றொரு விளம்பரம். பொறு. பொறுத்திரு எல்லாவற்றிற்கும் வேளை என்று ஒன்று இருக்கிறது.

## 8. வேணி

மூர்த்தி சென்றதும் கணவனைப் பார்த்தாள். "வேணி என்ன சொல்றே!" என்றான்.



"எதைப்பற்றி?"

"என் ஃப்ரெண்டைப் பற்றி."

"சாதுவாத்தான் தோணுது."

"என்ன ஒரு அடக்கம் பார்த்தியா?"

"அதை நான் எதுக்குப் பார்க்கணும்?"

"இல்லை வேணி. அவன் நம்ப வீட்டிலே இருக்கப் போறவன் இல்லையா; அதுக்கு உனக்கு எந்த விதத்திலும் ஆட்சேபணை இருக்கக் கூடாதே, அதைத்தான் அவனே கேட்டான்."

"என்ன கேட்டார்?"

"உன் ஒப்புக்கு அப்ஜெக்ஷன் இல்லாத பட்சத்தில் நான் இங்கே இருக்கேன்னு."

"நான் எப்படி அப்ஜெக்ட் பண்ண முடியும். வீடு அவர்தானே ஏற்பாடு பண்ணிக் கொடுத்தது."

"அப்ஜெக்ட் பண்ண வேண்டிய அவசியமும் இல்லைன்னு சொல்ல வரேன்."

"அதைப்பற்றி எனக்கு இப்ப ஒரு அபிப்பிராயமும் இல்லை. கொஞ்ச நாள் போகட்டும். சரியாத் தெரிஞ்சிக்காம ஒரு ஆளைப்பற்றி அபிப்பிராயம் சொல்றதும் தப்புதான்."

"அவனைப் பற்றி உனக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்படும் பார்."

"லெட்ஸ் ஹோப் ஸோ."

குளியல் அறைக்குச் சென்ற சாமி "இதப் பார் வேணி வென்னீர் எல்லாம் போட்டு வைச்சிருக்கான்" என்றான்.

வேணி அந்த ப்ளாட்டைச் சுற்றிப்பார்த்தாள் அறைகள் காலியாக இருந்தன. அலமாரிகள் காலி, கட்டில் மெத்தையெல்லாம் ரயில்வே பார்சலாக இன்று அல்லது நாளை வரும். வந்த பின் கொஞ்சம் நிரம்பும். கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்து ஒன்றிரண்டு நாற்காலிகள், டைனிங் டேபிள் எல்லாம் வாங்க வேண்டும். திரைகள் தைத்து அதோ அந்த இடத்தில் ஒரு பத்திக் மாட்டலாம். அங்கே புஸ்தகங்கள் அடுக்கலாம். இங்கே ஒரு குத்து விளக்கு வைக்கலாம். இந்த இடத்தில் ரேடியோ ...

காலியாக இருந்த ஹாலில் உட்கார்ந்தாள். வீட்டுக்காரர்கள் சாமான்களை ஒரு அறையில் பூட்டி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய வீட்டுக்கு சாமான்கள் வாங்கிக் கட்டுபிடியாகாது. வேணிக்கு இந்த வீடு ரொம்பப் பெரிசு என்று பட்டது. அவள் எதிர்பார்ப்பில் தனிக்குடித்தனம் என்பது வேறு விதம். ஒரு சின்ன வீடு, ஒட்டுக் குடித்தனம். பின்கட்டில் ஒரு வயசான மாமி சின்னக் குழந்தை. பக்கத்து வீட்டில் கும்பலாகப் போய்ப் பார்க்க டி.வி ... இந்த வீடு பெரிசு; தனிமை யானது. பார்க்கலாம். சீக்கிரமே இவரை வேறு வீடு பார்க்கச் சொல்ல வேண்டும். இரண்டு வருஷம் இங்கே தாங்காது!

அதே சமயம் இந்த வசதி வாய்ந்த வீட்டை



ஏன் வெறுக்கிறோம் என்பதும் அவளுக்குப் புரியவில்லை.

ஏன்?

சாமி குளித்துவிட்டு வந்ததும். "நான் போய் ரெயில்வே ஸ்டேஷன்ல விசாரிச்சிட்டு வந்துடறேன். நீ தனியா இருப்பியா?" என்றான்.

"இல்லை நானும் வரேன்" என்றாள்.

"பார்சல் ஆபீசுக்கா? குட்ஸ் யார்டுக்கா?"

"ஆமாம்."

"தனியா இருக்க பயமா உனக்கு"

"இல்லை. முதல் நாளே வேண்டாம். உங்க ளோட வரேனே."

சென்னைத் தெருக்களில் தன் கணவன் புஜத்தைப் பிடித்துக் கொண்டு நடப்பது அவளுக்கு சந்தோஷமாக இருந்தது. எத்தனை ஜனங்கள்! முதல் முதலாக தத்தம் சொந்தக் கவலையில் அவளை முறைத்துப் பார்க்க அவகாசமில்லாத ஜனங்கள். எவ்வளவு கூட்டம். கரைந்து போய்விடலாம் போலக்கூட்டம். அப்படியே என்னை விழுங்கிவிடக்கூடிய கும்பல். தனிமை இல்லை. இங்கேதான் எனக்குச் சற்று ஆறுதல். எனக்கு சந்தோஷம்.

"இதப் பாருங்க, இந்த மாதிரி கூலிங்கிளாஸ் ஒண்ணு நீங்களும் வாங்கிப் போட்டுக்கங்க."

"என்னப்பா விலை?"

"எண்பத்தி அஞ்சு ரூபாய்க்கு ரேபான்ஸ்."

"சரிதான்" நடந்தார்கள்.

"சரி என்ன குடுப்பீங்க?"

"எய்ட்டி ஃபைவ் எல்லாம் ஜாஸ்திப்பா" என்றான்

"என்ன குடுப்பீங்க, சொல்லுங்களேன்."

"எட்டு ரூபா" என்றான்.

"சரி எடுங்க."

ஆச்சரியம்!

ரத்த ரத்தக் கீறல்களாக வாட்டர் மெலன் கடித்துவிட்டு ஜல தோஷம். எலெக்ட்ரிக் டிரெயினில் அத்தனை கூட்டத்தின் மத்தியில் சிகரெட் புகை மூக்கில் புக இருமல்.

உதிரிப் பூக்கள் பார்த்துவிட்டு அஸ்வினி செத்துப் போகிற சமயம் விசும்பல்களுடன் அழுகை. அப்புறம் இரவில் சந்தோஷம். மெலிதான வேதனை. புதிய புதிய தொடுகைகள்; உணர்ச்சிகள்.

"அப்பா, இதில் இத்தனை இருக்கா?"

"இனிமேத்தான். இனிமேத்தான்."

சின்ன ஸ்டவ்வில் முதலில் காப்பி போட்டுப் பழகி அதன்மேல் குக்கர் வைத்து, ஒரு ரசம். ஒரு அப்பளம் அப்புறம் மெதுவாக, மெதுவாக அம்மாவின் போதனைகளை நினைவில் கொண்டு உப்பைக் கொட்டி, பொடியைக் கொட்டி மெல்ல மெல்ல சமையல் என்று ஏதோ செய்து கணவனின் முகத்தை ஆர்வத்



துடன் பார்த்து, அவன் எதுவாக இருந்தாலும பிரமாதம் என்று சொல்லும் பெருந்தன்மையை வியந்து, அவன் துணிகளைத் துவைப்பதிலும் பட்டன் தைப்பதிலும் கைக்குட்டை மடிப்ப திலும் பாலிஷ் போடுவதிலும் அதிக சந்தோஷம் அடைந்து, அவன் வருவான் என்று எதிர்பார்த்து, கையில் பையும் டிபன் பாக்சும், கழுத்துப் பட்டையில் கைக்குட்டையுமாக அவர் லொங்கு லொங்கு என்று நடந்து வரும்போது சிரிப்பை அடக்கிக்கொண்டு . . .

"சிரிக்கிறே."

"சேச்சே."

"ஏன் சிரிக்கிற சொல்லேன்! என்னைப் பார்த்தா அச்சுபிச்சு மாதிரி இருக்கில்ல."

"அச்சு! என் அருமை அச்சு!"

"நான் அழகா இல்லை, அதானே?"

"இதப் பாருங்க. இந்த காம்ப்ளெக்ஸ் உங்க ளுக்கு வரவே கூடாது."

"நான் அழகா இருக்கிறதா எல்லாரும் சொல் லிக்கறாங்க. இந்த அழகு சீமா, வெளியே இறைச்சி, தோல், எலும்பு. இது எல்லாத்தை யும் பிச்சு உதறிப்பிட்டு உள்ளுக்குள்ள ஒரு அழகு இருக்கு. அதான் நான் தேடறது. நீங்கதான் பார்த்தீங்களே. பதினைஞ்சுநாளா நாம ரெண்டு பேரும் செக்ஸ் செக்ஸ்ன்னு எத்தனை முறை ஆய்டுத்து. அந்த ப்ராஸஸ்ல. அந்தப் படுக்கை இருட்டில் அழகாவது ஒண்ணாவது. வம்ச

விருத்தி – ஒண்ணில் பாதி பாதின்னு மற்றொரு பிரஜை உண்டாக்கறதுதான். இயற்கை அல்லது கடவுள் நம்மைப் படைத்திருக்கிற கடமை. இதில் அழகு எல்லாம் ரெண்டாம் பட்சம். ஒருத்தரை ஒருத்தர் கவர்றதுக்குள்ள மார்க்கங்கள். நான் விரும்பறது இதுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு அறியாமை, இன்னொசன்ஸ். ஒரு யோக்கியம், நாணயம், நிஜம், அது உங்ககிட்ட இருக்கு. சீமா எனக்கு முன்னாடி உங்க அமிதாப் பச்சனையும், சார்லஸ் பிரான்சன்களையும் கொண்டு நிறுத்தினாக்கூட சீமா எங்கேன்னு தான் கேட்பேன். நான் பாட்டுக்குப் பேசிட்டே இருக்கேன். சீமா நீங்க ஒரு வார்த்தை பேசலியே!"

"வேணி உன்னை மாதிரி எனக்குப் பேச வராது. ஆனா ஒண்ணு சொல்லிடறேன். உன் மேல எனக்குப் பரிபூரண நம்பிக்கை, காதல், பக்தி . . . சரணாகதி!"

"போதும்" என்றாள். "நீங்க என்னை ஆளணும்."

## 9. சாமி

மறுபடியும். மறுபடியும் சாமிக்குத் தன் அதிர்ஷ்டத்தைப் பற்றி நினைக்க நினைக்க மலைப்பாக இருந்தது. அந்தப் பெண்ணுடன் தினம் தினம் பழகியதில் அவள் உள் மனத்தின் குணாதிசயங்கள். ஆணித்தரமான அபிப்பிராயங்கள். ஆணவமற்ற பேச்சு, குறும்பு, திகைப்பு, பெண்மை, மென்மை ஒவ்வொன்றும் வெளிப்பட அவனுள் மைகாட், நம்ப முடியாத உண்மை இது என்று தோன்றியது. மனத்தின் தூரத்தில், ஓரத்தில் ஒரே ஒரு சின்னக் கவலை அடிக்கடி தென்பட்டது. இது நிலைக்காது.



'சேச்சே ஏன் அப்படி எண்ணுகிறாய்?'

ஆபீசில் உட்கார்ந்திருக்கும் போது அவன் மனம் அவள் மேல் மெலிதாக உணரப்பட, லெட்ஜர் கூட்டல்களின் இடையில் எண்ட்ரிகளின் இடையில் வேணியின் புன்னகை அவனைச் சீண்டியது. அருகே உட்கார்ந்திருந்த மூர்த்தி அவனை அடிக்கடி பார்க்கையில் சற்று வெட்கமாகக்கூட இருந்தது. சே! அழகான மனைவி கிடைத்து விட்டாள் என்று ரொம்ப அலட்டிக்கொள்கிறேன் போல்!

மூர்த்தி லஞ்ச்சின் போது வந்தான்.

"என்ன சாமி?"

"மூர்த்தி, நீ ஏன் ராத்திரி ரொம்ப லேட்டா வர்றே?"

"புதுசாக் கல்யாணம் ஆன உங்களை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு."

"சேச்சே! நீ எங்களோடேயே சாப்பிடலாம். நல்லாவே சமைக்கிறா. ஆரம்பத்தில்தான் கொஞ்சம் உப்பை அள்ளிப் போட்டுட்டா."

"பார்க்கலாம். சமயம் வர்ற போது பார்க்கலாம்."

"மூர்த்தி சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்க."

"ம்."

"கல்யாணத்தில் இருக்கிற சுகம் சொல்லித் தெரியாது. திரும்பிப் போறதுக்கு ஒரு வீடு, உனக்காகக் காத்திருக்க ஒரு மனைவி. எனக்குத் தான் அவளைப் பார்த்தா பாவமா இருக்கு. வீட்டில் உட்கார்ந்து போர் அடிக்கிறது அவ ளுக்கு. ஆனா சொல்ல மாட்டேங்கறா."

"வேலைக்குப் போகலாமே! சமீபத்தில் நான் ஒரு விளம்பரம் பார்த்தேன். அது உன் மனைவிக்கு சரிப்பட்டு வரும்னு தோணிச்சு."

"என்ன விளம்பரம்?"

"இரண்டு நாள் முன்னாடி பேப்பர்ல வந்ததே பார்க்கலை?"

"நான் இப்ப எதுவும் பார்க்கறதில்லை."

"இரு, ஆபீஸ்ல பேப்பர் இருக்கா பார்க்கறேன்!"

மூர்த்தி டெஸ்பாட்ச் செக்ஷனிலிருந்து பழைய பேப்பர் வாங்கி வந்தான்!

பழம் பெரும் கம்பெனியின் சிற்சில புதிய தாயாரிப்புகளை பிரபலப்படுத்த, விளம்பரம் எழுத, படித்த குடும்பப் பெண்கள் பார்ட் டைமாகத் தேவை. கம்பெனி வேலை. தபால் பெட்டி எண்...க்கு எழுதுக.

"இன்ட்ரஸ்ட் இருந்தா உன் மனைவி இதுக்கு அப்ளை பண்ணலாம்."

"என்ன வேலைன்னு சரியாப் போடலியே" என்றாள் வேணி.



"அப்ளை பண்ணிப் பார்க்கலாமே!"

"நான்கூட இண்டர்வியூவுக்கு வரேன்" என்றான் சாமி.

"விளம்பரம் எழுத வராதே எனக்கு."

"எல்லாம் சொல்லித் தருவா."

"எத்தனை சம்பளம் தருவா?"

"உன்னைப் பார்த்த உடனே...500 ரூபாய்தான்."

"அப்படின்னா நான் வர்லை."

"சேச்சே... விளையாட்டுக்குச் சொன்னேன். போட்டுப் பார்க்கலாம். நமக்கு சரிப்பட்டு வரலைன்னா விட்டுடலாம்...உனக்கு இஷ்ட மிருந்தா சரி.."

"இந்த இரண்டு விரலிலே ஒண்ணு தொடுங்கோ."

"தொட்டால்."

"விரல் விரல்."

இரண்டையும் தொட்டான்.

"எப்பவும் குறும்பு உங்களுக்கு..."

"என்ன போச்சு! முப்பது பைசா. போட்டுத் தான் பாரேன். எழுது, டியர் சார், வித் ரெஃபரன்ஸ் டு யுவர் அட்வர்டைஸ்மெண்ட் அப்பியர்ட் இன்.."

சாமி மறுதினமே அதை டைப் அடித்துத் தபாலில் சேர்த்தான்.

"நான் வேலைக்குப் போய் ஆகணுமா இப்ப?"

"சும்மா ஒரு அடிஷனல் இன்கம். அவ்வளவு தானே! இதப் பார். நான் உடனே ஃபோர்ஸ் பண்றதா நினைக்க வேண்டாம். உனக்கு இஷ்டம் இல்லைன்னா விட்டுடு. எட்டு மணிநேரம் நீ வீட்டில் சும்மாதானே இருக்கே! உனக்கு போர் அடிக்கிறது. ஆனா அதை சொல்லமாட்டே நீ. இந்த வீடு தனியா இருக்கு. ஜாஸ்தி ஃப்ரெண்ட்ஸ் இல்லை. உனக்குத் திறமை இருக்கு. நிச்சயம் உனக்கு இந்த வேலை கிடைக்கும்னு தோணறது... பயப்படாதே. நான் கூடவே இருக்கேன். ஒரு ஸ்கூட்டர் வாங்கணும் நாம. வேலைக்கு ஒரு ஆள் வைச்சிக்கணும்... தினம் தினம் நீ துணி துவைக்கறதும் பாத்திரம் தேய்க்கறதும் எனக்குப் பிடிக்கலே. என் சம்பளம் போறாது. கிளியராகத் தெரியறது. என்ன சொல்றே?"

"பார்க்கலாம்... முதல்ல பதில் வரட்டும்."

பதில் வரவில்லை. ஏறக்குறைய அதை மறந்து விட்டார்கள்.

## 10. மூர்த்தி

மூர்த்தி கொடுத்த முதல் விளம்பரம், அந்த கோடவுன் சமாச்சாரமாகும். அதற்கு ஆறு பதில்கள் வந்திருந்தன. ஆதம்பாக்கத்தில் ஒரு இடம், தாம்பரம் தாண்டி ஒன்று, கொரட்டூர்...

ஒரு ஞாயிற்றுக்கிழமை. அவைகளில் மூன்றைப் போய்ப் பார்த்தான், ஒன்றைத் தேர்ந்தெடுத்தான். தாம்பரம் தாண்டி கரடு முரடான பிரதேசத்தில் தனியாக ஒரு சின்ன ஷெட் இருந்தது. சைட் ஃபார் தியாகா நகர் என்று ஒரு போர்டு கேட்பாரற்று வெற்றிலை போட்டுத் துப்பிய காவியுடன் இருந்தது. சின்ன ஆஸ்பெஸ்டாஸ் கூரை வைத்த ஷெட் அது. மெயின் ரோடிலிருந்து தள்ளி இருந்தது. ஒரு பர்லாங் உள்ளடங்கி இருந்தது. துருப்பிடித்த பூட்டைத் திறந்து கதவைத் திறந்ததும் கீழே சிமெண்டுத் தரை சுமாராக இருந்தது. பர்ஃபெக்ட். இதுதான் சரியான இடம். "வாடகை என்ன கேட்கறீங்க!"

"குடுங்க. உங்க இஷ்டம். எஜமானவர் வெளிநாட்டில் இருக்கார். வேஸ்ட் ஆவுதேன்னு பதில் போட்டேன். நீங்க வேற யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம். ஏன்னா..."

"உங்க எஜமானருக்குத் தெரிய வேண்டாம், அவ்வளவுதானே."

"ரெண்டு மூணு மாதத்திலே காலி பண்ணிடுவீங்கங்கற நம்பிக்கையில்தான்."

"நிச்சயம் எனக்கு அவ்வளவு நாள் போதும்... இந்தாங்க." இரண்டு நூறுரூபாய் நோட்டுகளைக் கொடுத்தான். அட்வான்ஸா வச்சுக்கங்க. பாக்கி முன்னூறு முதல் தேதி தர்றேன்..."

"என்ன அடுக்கப் போறீங்க."

"சில வெளிநாட்டு சரக்குகள். உங்க பேர் என்ன ?"

"நாதன்."

"நாதன், இது விஷயம்..."

"மூச்."

"நீங்க மறுபடி இங்க வருவீங்களா? முதல் தேதி நானே உங்க வீட்ல வந்து கொடுத்துடறேன்."

"சரி புரியுது."

மூர்த்தி அந்தக் காலி ஷெட்டைப் பார்த்தான். இடம் கிடைத்து விட்டது, இனி அவளைக் கொண்டு வர வேண்டியதுதானே. அடுத்த விளம்பரம் கொடுத்திருக்கிறான்... ஷெட்டை மறுபடி பூட்டி சாவியை எடுத்துக்கொண்டான்.

அவனுள் ஒரு சிறு பிள்ளையின் ஆர்வம் புறப்பட்டது. மெல்ல நிதானமாகச் செய்ய வேண்டிய காரியம் இது. தனியாக நான் ஒருத்தன் மட்டும் கொண்டுவர வேண்டும். கஷ்டம். ஆனால் அது சாத்தியம். அவன் நினைத்து வைத்திருக்கிறபடி அது சாத்தியம். ஏன் சுலபம்...

அடுத்து இரண்டாவது விளம்பரம்.

மூர்த்தியின் இரண்டாவது விளம்பரத்திற்கு ஏறக்குறைய முன்னூறு மனுக்கள் வந்திருந்தன. குப்பையாக அவைகளை பத்திரிகை ஆபீசிலிருந்து அள்ளி அடுக்கிக்கொண்டு அவைகளை



கட்டித் தன் ப்ரிப்கேச்சில் திணித்துக்கொண்டு இரவு வீட்டுக்கு வந்தான். இரண்டு பேரும் வீட்டில் இல்லை. சினிமா போவதாகச் சொன்னார்கள். அப்பாடா...!

தன் அறைக்குச் சென்று அத்தனை கடிதங்களையும் பரப்பி ஒவ்வொன்றாகப் பார்வையிட்டான். திருமதி. பிரபா ராமச்சந்திரன், ஜெனிஸ் பிரகாசம், சந்தியா ராமமூர்த்தி... திருமதி கலா விஜயகுமார். எனக்கு வேண்டிய ஒரே ஒரு திருமதி கிருஷ்ணவேணி அண்ணாசாமி... எங்கே... எங்கே... கிடைத்துவிட்டாள். அந்தக் கடிதத்தைப் பார்த்தான். டைப் அடித்து அதன் கீழே அவள் கையெழுத்து. மற்றக் கடிதங்களை எல்லாம் சேர்த்து தனித்தனியாகக் கிழித்து ஜாக்கிரதையாக அவைகளை ஒரு பெரிய கவரில் போட்டுக் கொண்டான்.

அவள் கையெழுத்து அந்த கேயில் ஒரு சாகசம். 'வி'யில் ஒரு வளைவு. மெல்ல ஹாலுக்கு வந்தான். புதிதாக இரண்டு ஸ்டூல் நாற்காலிகள் வாங்கியிருக்கிறாள். பழைய புடவையைக் கையால் தைத்து கர்ட்டன் செய்திருக்கிறாள். அலமாரியில் புஸ்தகங்கள், கனவுகள் கற்பனைகள் காகிதங்கள், தனிப்பாடல் திரட்டு, Fowlers Modern English Usage நிறைய படிப்பவள் போலும். அண்ணாசாமிக்கு எங்கே இதெல்லாம். கல்யாண போட்டோ! அமெச்சூர்தனமாக அடிக்கப்பட்ட ஃப்ளாஷ். இருந்ததும் எத்தனை உயிர்!

மெல்ல அவர்கள் படுக்கை அறைக்குச் சென்றான். கொடியில் தொங்கிய புடவைகளைத் தொட்டுப் பார்த்தான்.

அன்புள்ள திருமதி. அண்ணாசாமி அவர்களுக்கு. உங்கள் 20–11–79 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றோம். எங்கள் கான்டினென்டல் கம்பெனியில் வேலை ஏற்க உங்களை நேரில் சந்தித்துப் பேச விரும்புகிறோம். உங்களால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு ...ந் தேதி வர இயலுமா? போக வர டாக்ஸி சார்ஜ் கொடுக்கப் படும்...

எத்தனாந் தேதி? இரு. இப்போது இல்லை. அந்தத் தேதி வர வேண்டும். வருடாந்திர ஆடிட் முடிந்து அவன் சேலம் பிராஞ்சிற்கு டூர் போக வேண்டிய சமயம் வரும். வரப் போகிறது. காத்திரு. அப்போது அனுப்ப வேண்டும் இக்கடிதத்தை... பொறு மூர்த்தி, பொறு!

மூர்த்தி அவள் உள்ளுடைகளைத் தொட்டுப் பார்த்தான். அவள் போடும் பவுடரை முகர்ந்து பார்த்தான். அவள் சிறிய கைப்பைக்குள் லிப்ஸ்டிக், சின்னக் கண்ணாடி, நகப்பாலிஷ்... அலங்காரம் செய்து கொள் பெண்ணே; நன்றாக அலங்காரம் பண்ணிக்கொண்டு இண்டர்வியூவிற்கு வா! நான்தானே உன்னை அழைத்துச் செல்லப் போகிறேன்.

அவர்கள் வரும் சப்தம் கேட்டது. அவசரமாகத் தன் அறைக்குள் வந்து சேர்ந்தான்.



கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. "மூர்த்தி! மூர்த்தி!" கையில் அந்தக் 'கனவுகள்' புத்தகத்தை எடுத்துக்கொண்டு கதவைத் திறந்தான்.

இருவரும் நின்றார்கள்.

"ஸாரி, தூங்கிட்டயா?"

"இல்லை, படிச்சிட்டு இருந்தேன். அலமாரியில் சில ஸ்வாரஸ்யமான புஸ்தகங்கள் எல்லாம் இருந்தன" என்று அதைத் திரும்ப வைத்தான்.

"அவருக்கு இன்ட்ரஸ்டுக்கு எடுத்துக்கச் சொல்லுங்க. படிச்சிட்டுத் தரட்டும்" என்றாள்.

"எனக்கு இன்ட்ரஸ்ட் உண்டு..."

"புதுக் கவிதை படிப்பீங்களா...?"

"ம்" என்றான்.

"அப்பாடா உன்கிட்ட பேசிட்டா பார்த்தியா மூர்த்தி."

"ஆமாம். முதல் தடவை" என்றான்.

"மூர்த்தி, அந்த அப்ளிகேஷன் போட்டெல்லே?"

"எந்த அப்ளிகேஷன்?"

"அதான் ... பேப்பர்ல வேலைக்கு விளம்பரம் வந்திருந்ததே..."

"ஆமாம்."

"அதுக்கு பதில் வரலை."

"அப்படியா? யாரோ சொன்னாங்க நல்ல கம்பெனி அதுன்னு... பெரிய கம்பெனி. நிறைய அப்ளிகேஷன் வந்திருக்கும். ஸ்கிரீன் பண்ணியி

ருப்பாங்க."

"வராட்டா பரவாயில்லை."

"இன்டர்வியூ பண்ண ஆரம்பிச்சுட்டாங்களா? உனக்கு ஏதாவது தெரியுமா மூர்த்தி?"

"தெரியாது. சாதாரணமா கொஞ்சநாள் ஆகும். பெரிய கம்பெனியானதாலே."

"அப்ப ஹோப் இருக்கும்கறே."

"அப்படித்தான் தோணுது. குட்நைட். நான் போயி படுக்கறேன். இந்தப் புத்தகத்தை நாளைக்குத் தர்றேன். அவங்க கிட்ட சொல்லிடு!"

"ஏன் நீயே சொல்லேன். என்ன மூர்த்தி வெட்கப்படறே, அவ ஒண்ணும் உன்னைக் கடிச்சு சாப்பிட்டுற மாட்டா."

"வெட்கமில்லை. ஒருவித மரியாதைதான்."

"பரவாயில்லை. நீங்க என்கூடப் பேசலாம்" என்றாள் வேணி.

"தாங்க்ஸ்."

"நான் அடுத்த வாரம் டூர் போகப் போறேன் தெரியுமில்லை? அப்ப நீதானே துணையா இருக்கணும் இவளுக்கு."

"எனக்குக்கூட டூர் இருந்தாலும் இருக்கும். தனியா இருக்கறதுக்கு பதிலா ஊர்ல இருந்து யாரையாவது கூட்டி வெச்சுக்கலாம்."

"அதுகூட நல்ல ஐடியாதான் வேணி."

"அம்மாவுக்கு எழுதியிருக்கேன். எங்க வர முடியும்?"

"நான் ஊர்ல இருந்தா பார்த்துக்கறதுல எனக்கு சிரமமில்லை..."

"ஒரு ஆண்பிள்ளைத் துணை. அவ்வளவு தானே!"

"கூட்டிட்டே போயிடேன்" என்றான் மூர்த்தி.

"கூட்டிட்டே போயிடேன்" என்றான் மூர்த்தி. கடவுளே அவள் வேண்டாம் என்று சொல்ல வேண்டும்!

"வேண்டாம். நானும் தனியா இருந்து பழக வேண்டாமா? அடிக்கடி டூர் போவாரா ஸார் இவர்?"

"வருஷம் இரண்டு முறை இருக்கும்."

"நான் தனியா இருப்பேன், எனக்கு பயமில்லே. நாள் பூரா தனியாதானே இருக்கேன். இரவு வேளைகளில் இவர் முன்னறையில் இருக்கார்."

"உறவுக்காரங்க வந்துட்டாலும் நல்லதுதான்" என்றான் மூர்த்தி.

"ஏன் ஸார் உங்களுக்கு நான் துணை இருக்கணும் போல் இருக்கே. பயப்படறீங்களே!"

"பயம் இல்லை, அக்கறை."

"ரொம்ப தாங்க்ஸ்!"

"குட்நைட்."

"குட்நைட்."

அறைக்கு வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு பாத்ரூம் சென்று ஸ்டூல் அமைத்து ஏறி இடைவெளி வழியாகப் பார்த்தான்.

வேணி மெல்ல வந்து தன் ஸாரியைக் களைந்தாள். வெறும் ஜாக்கெட் பாவாடையுடன் நின்றாள்.

"நல்லவர்தான்."

"அவன் ஒரு ஜெம்."

வேணி தன் முதுகுப்புறம் கை நீட்டி அதன் கொக்கிகளை விடுவித்து ப்ரேஸியரில் நின்றாள். ஒரு கணம் வெளிச்ச வித்தி யாசத்தில் செதுக்கி வைத்தாற் போல் அவள் மார்பின் விம்மல் தெரிய அலமாரிக்குச் சென்றாள். மற்றொரு சாதாரண ரவிக்கை எடுத்து அதை லூஸாகப் போட்டு ஒன்றிரண்டு பட்டன் மட்டும் போட்டுக்கொண்டு வாயில் புடவை எடுத்து...

சாமி அவள் இடுப்பில் முத்தமிட்டான்.

'பாவி பாவி தொடாதடா அவளை.'

சாமி அவளைத் திருப்பி அவள் மார்பில் முகம் பதித்தான்.

"ம் மா விடுங்க... அப்புறம்!"

அறையைவிட்டு அவர்கள் வெளியே சென்றார்கள். ரேடியோ கேட்டது. பாழாய்ப் போன நேயர் விருப்பம். பதினைந்து நிமிஷம் அந்தக் காலி அறையைப் பார்த்துக்கொண்டு காத்திருந்து சோர்வுடன் கீழே இறங்கினான். இதயம் திடும் திடும் என்றது.

மூர்த்தி, என்ன காரியம் இது. பாவம் இல்லையா?



ம்ஹூம்.

இதற்கு தண்டனை கிடைக்கும் தெரியுமா? யார் தண்டிப்பார்கள்? கடவுள், சமூகம், போலீஸ் எல்லாரையும் ஏமாற்றப் போகிறேனே. என்னை யார் கண்டுபிடிப்பார்கள்?

அவள் அடையாளம் காட்ட மாட்டாளா?

மூர்த்திக்கு திடுக்கிட்டது. ஆம்! அந்தக் காரியத்திற்குப் பிறகு அவள் வந்து சொல்லி விடுவாள்... அப்போது என் கதி?

ஒன்று நான் வேற்றூர் போய்விடலாம். மூன்று தினங்கள். நான்கு தினங்கள். ஒரு வாரம். அதற்குப் பிறகு ஓடிப் போய் விடலாம்... அண்ணாசாமி அதைப் பிரபலப்படுத்த மாட்டான். அவன் சுபாவம் அப்படி. அப்படியே கமுக்கமாக இருந்துவிடுவான்.

அல்லது... அவளைக்...

சே, என்ன நினைப்பு இது. கூடாது. கூடவே... கூடாது. பார்க்கலாம். பொறுத்திருந்து பார்க்கலாம்.

மூர்த்தி மறுபடி பாத்ரூம் சென்று ஸ்டூல் மேல் ஏறிப் பார்த் தான்... இருட்டாக இருந்தது. இறங்கி வந்துவிட்டான். இரவு மூன்று மணிவரை அவன் தூங்கவில்லை.

## 11. வேணி

முதல் பிரிவு அவள் மனத்தில் கனத்தது. அழுகைகூட வந்தது. டூர் போகிறான். போயே ஆக வேண்டும் என்ற கட்டாயம். தனியாக இருக்க வேண்டும். அம்மா வந்துவிட்டால் கவலை இல்லைதான். இருந்தாலும்...

போன உடனே தந்தி... அப்புறம் காலையில் ஒரு லெட்டர்.

சாயங்காலம் ஒரு லெட்டர்... போஸ்ட்மேன் அலுத்துக்கப் போறான்.

"முடிஞ்ச உடனே! உடனே ஓடி வந்துவிடுவேன். வேணிக்கண்ணு! போயிட்டு வரட்டுமா...?"

"உடம்பைப் பார்த்துக்கங்க."

"ஏதாவது ஹெல்ப் வேணும்னா மூர்த்தியைக் கேட்டுக்க. தயங்காதே என்ன?"

"ம்."

"நல்ல வேளை... அவன்கூட டூர் போறதா இருந்தது. கடைசி நிமிஷத்தில் 'கான்ஸல்' ஆயிடுத்து. நீ தனியா இல்லை. என் மனசை இங்க கழட்டி வெச்சுட்டுப் போறேன்."

"புதுக்கவிதை படிக்கிற எஃபெக்ட் தெரியுது உங்க பேச்சில்."

"அது என்ன? மலர் வாடினால் பரவாயில்லை. மனம் வாடறதுக்குள்ள வந்துடு!"

அவள் புன்னகைத்தாள்.



"அப்பாடா! இதைப் பார்க்கத்தான். காத்திருந்தேன். டாட்டா..."

"போய்ட்டு வர்றேன்னு சொல்லுங்க."

"போய்ட்டு உடனே வரேன்!"

அவன் சென்றதும் ஏற்பட்ட வெறுமை அவளை முழுமையாகத் தாக்கியது. மெலிதான பயமும் வயிற்றில் ஏற்பட்டது. அதன் காரணம் புரியவில்லை. தினம் ஆபீசுக்குப் போறான். திரும்பி வருகிறான். அதுபோலத்தான். ஒரு சில இரவுகள் இருக்கமாட்டான். தனியாகப் படுத்துக்கொள்ள வேண்டும். முன் அறையில் அவன் இருக்கிறான் – இருப்பான் என்கிற ஒரு எண்ணச்சுமையோடு படுத்துக்கொள்ள வேண்டும். மூர்த்தி நல்லவன் போலத்தான் இருக்கிறான். இதுவரை என்னை ஏறிட்டுப் பார்த்ததில்லை. தான் உண்டு, தன் காரியம் உண்டு. பூனைபோல் வந்து எப்பொழுது வருகிறான் என்பது தெரியாமல் அவனது பிரசன்னம் ஒரு விதத்திலும் உறுத்தாமல்... கவலை இல்லை. எதற்காகக் கவலைப்பட வேண்டும். பின் ஏன் இந்த பயம்... அம்மா இருக்கிறாள்... ஆனால் எல்லா முதல் அனுபவங்களின் ஓரத்திலேயும் ஒரு பயக்கோடு இழையோடுகிறது. முதல் சந்திப்பில், முதல் இரவில், முதல் சமையலில், முதல் உத்தியோகத்தில்... அந்த அப்ளிகேஷன் என்ன ஆயிற்று?

இரவு மூர்த்தி வந்து கதவைத் தட்டின போது திறந்தாள். தன் அறைக்குச் சென்றான். "உங்க அம்மா வந்துட்டாங்களா?" என்று தரையைப் பார்த்துக்கொண்டு கேட்டான்.

"வந்துட்டாங்க."

"கவலை இல்லை. ஏதாவது வேணும்னா கூப்பிடுங்க."

"தாங்க்ஸ்."

"சாமி சீக்கிரம் வந்துடுவான்."

"ஆமாம்."

"உங்க புஸ்தகம் ரிட்டன் பண்ணிட்டன். மேஜை மேல் வைத்திருக்கேன் ... நமஸ்காரம் பெரியம்மா!"

"வாப்பா மூர்த்தி. நீ ஏன் கல்யாணத்துக்கு வரலை?"

"உடம்பு சரியில்லை."

"சௌக்கியமா இருக்கயா?"

"இருக்கேனம்மா."

"உனக்கு எப்ப கல்யாணம்?"

"அதுக்கு என்ன அவசரம் இப்ப?" அவன் அறைக்குச் சென்றதும் "நல்ல பிள்ளை" என்றாள் அம்மா.

மறுதினம் காலை தபாலில் அவளுக்கு அந்த இண்டர்வியூ கடிதம் வந்தது... உங்கள் 20-12-79 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றோம். எங்கள் காண்டினென்டல் கம்பெனியில் வேலையேற்க உங்களை நேரில் சந்தித்துப் பேச விரும்புகிறோம்... உங்களால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு... நாளைக்கே!

நாளை வரவேண்டுமாம்! நாளைக்கே! எப்படித் தனியா போவது... வேண்டாம். அவர் இல்லை. இண்டர்வியூவை ஒத்திப் போடும்படி எழுதிவிடலாம்.

"என்னடி கடுதாசி?"

"வேலைக்கு இண்டர்வியூ வந்திருக்கும்மா!"

"என்னிக்கு?"

"நாளைக்கே?"

"எப்படிப் போவே?"

"அதான் யோசிக்கறேன், தனியாப் போக முடியாது..."

"நானும் வரட்டுமா?"

"நீயா? ஆண்பிள்ளைத் துணை வேணும்மா... அவர் வரட்டும்."

"இந்தப் பிள்ளை மூர்த்தியை வேணாக் கேட்டுப் பாரேன். ஊருக்குப் போறப்போ உன் புருஷன் திரும்பத் திரும்பச் சொல்லிட்டுப் போனானே."

"அவரா?"

"நான் வேணாக் கேட்டுப் பார்க்கட்டுமா? நல்ல பையன் அழைச்சிட்டுப் போவான். மெட்ராஸ்லதானே!"

"எங்கேயோ தாம்பரத்திலன்னா இருக்கு"

என்றாள். வரச் சொல்லியிருக்கும் முகவரியைப் பார்த்து. "வேண்டாம்மா" என்றாள்.

"வேண்டாம்னா விட்டுடு. எதற்கும் அந்தப் பையனை விசாரிக்கச் சொல்லலாம்."

மாலை மூர்த்தி வந்ததும் "இந்த லெட்டரைப் பாருப்பா" என்றாள் அம்மா.

பார்த்தான்.

"தாம்பரத்தில ஏதோ அட்ரஸ் கொடுத்திருக்கே. வேண்டாம்னுட்டா. இது என்ன கம்பெனி விசாரிக்க முடியுமா உனக்கு?" என்றாள்.

"விசாரித்துப் பார்க்கிறேன்" என்றான்.

"நாளைக்கு வரச் சொல்லியிருக்கா" என்றாள் வேணி.

"என் ஃப்ரண்ட் ஒருத்தன்கிட்ட விசாரிச்சுட்டு வர்றேன். காண்டினென்ட்டல்ங்கிறது நல்ல கம்பெனின்னு கேள்விப் பட்டிருக்கேன்" என்றான்.

வெளியே சென்று ஒரு மணிநேரம் கழித்துத் திரும்பி வந்தான். "விசாரித்தேன். காண்டினென்டல் கம்பெனியில வேலை செய்றவனையே ஒருத்தனைத் தெரியுமாம். கம்பெனி நல்ல கம்பெனிதானாம். வேலை மெட்ராஸ்ல தானாம். மவுண்ட் ரோடில். இண்டர் வியூ, அவங்க ஃபாக்டரியில வைச்சிருக்காங்களாம்... அதனாலதான் டாக்சி சார்ஜ் தர்றதா எழுதியிருக்காங்க. ஆட்சேபணை இல்லைன்னா நான் பத்திரமா அழைச்சிட்டுப் போறேன்."



"என்னடி போயிட்டு வர்றியா?" என்றாள் அம்மா.

வேணி இரவு இதை யோசித்தாள். மூர்த்தியின் பேரில் அவளுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டு இருந்தது. மிகவும் பவ்யமாக – மிகவும் சாத்வீகமாக – இருக்கிறான். என்னைத் தனியே அழைத்துப் போகத் தயங்குகிறான். என்ன பயம் இருந்தாலும் அவர் வந்தால் அவருடன் கூடப் போவதில் எனக்கு ஒரு தயக்கம் இருக்காது. அவரே தீர்மானிக்கட்டும். அவருக்குத் தான் சற்று சிரமம். இருந்தாலும் பரவாயில்லை.

அதிகாலை அந்தத் தந்தி வந்தது.

"என்னால் வர முடியவில்லை. மூர்த்தியுடன் செல்லவும். சாமி."

தந்தி எங்கேயிருந்து வந்திருக்கிறது என்பதை அவள் பார்க்கவில்லை.

"என்ன தந்தி?"

"அவரால் வரமுடியலையாம், மூர்த்தியோட போகலான்னு அடிச்சிருக்கார்."

"போறியா?"

"போறேனம்மா."

மூர்த்தியின் அறைக் கதவைத் தட்டி அந்தத் தந்தியைக் காட்டினாள்.

"சரி நான் வரேன். இன்னிக்கு லீவு போட்டுட்றேன். பத்து மணிக்குக் கிளம்பிடலாம்" என்றான்.

குளித்துவிட்டு பளிச்சென்று உடை உடுத்திக்கொண்டு தன் ஸர்ட்டிபிகேட்டுகள் அத்தனையும் எடுத்துக்கொண்டு சாமி படத்தின் முன் இருந்த குங்குமத்தை இட்டுக்கொண்டு ஒன்பதரைக்கே தயாராகக் காத்திருந்தாள்.

மூர்த்தி அறையிலிருந்து வெளியே வந்தான்.

"காப்பி சாப்பிட்டுவிட்டுப் போயேன்" என்றாள் அம்மா.

"உங்க பெண்ணுக்கு வேலையானதும் காப்பி ஸ்வீட் எல்லாம் தாங்க" என்றான். "புறப்படலாமா?"

டாக்ஸியில் அவன் முன் ஸீட்டில், அவள் பின்புறம் ஏறிக்கொள்ள அம்மாவுக்கு "டாடா" காட்டினாள். தபால்காரன் வந்தான். ஒரு கடிதம் இருந்தது அவளுக்கு. அதை வாங்கிக் கொண்டாள்.

டாக்ஸி கிளம்ப அதைப் படித்துப் பார்த்தாள். எட்டுப் பக்கம் இருந்தது.

'டியரஸ்டு வேணி. உன்னைப் பிரிந்ததின் அதிர்ச்சி இங்கு வந்ததும்தான் தெரிந்தது. இத்தனை நாள் உன்னுடன் இருந்துவிட்டு இப்பொழுது உன்னைப் பிரிந்த முதல் இரவு ரயில் பூரா உன் நினைவுதான். பிளாட்பாரத்தில் பூவைப் பார்த்ததும் உன் நினைவுதான்.

'சக பிராயணிகளில் சாதாரணப் பெண்களைப் பார்க்கும் போது அடடா என் மனைவி எத்தனை அழகு என்று பளிச்சென்று தெரிகிறது. உன்னைத் தொட்ட என் விரல்களை அடிக்கடி வருடிக் கொண்டேன் . . .'

இப்படியே பக்கம் பக்கமாக. மனிதருக்குப் பைத்தியம்தான். எத்தனை வர்ணனை. திரும்பத் திரும்பப் படித்தாள்.

டாக்ஸி நின்றிருந்தது. தாம்பரம் தாண்டி ஒரு பெட்ரோல் பங்கு அருகில் எதிரே ஒரு தொழிற்சாலை போல் இருந்தது. மூர்த்தி டாக்ஸிக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டான். "இங்கேயே நில்லுங்க. ஃபாக்டரியில் விசாரிச்சுட்டு வரேன்" என்று சொன்னான். அந்தத் தொழிற்சாலையின் பக்கம் சென்றான்.

சற்று நேரத்தில் திரும்பி வந்தான்.

"ஸாரி, இந்த இடம் இல்லையாம். ஒரு ரெண்டு ஃபர்லாங் தள்ளி உள்ள இருக்கலாம். இன்னொரு டாக்ஸி கொண்டு வரட்டுமா?"

"ரெண்டு ஃபர்லாங்தானே, நடந்துவிடலாமே!"

நடந்துகொண்டே படித்தாள்.

'என் இனிய மனைவி நீ! என் தின வாழ்க்கை, மன வாழ்க்கை எல்லாமும் ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் காதலி நீ. உனக்காக என் இதயத் துடிப்பு ஒவ்வொன்றும் ஏங்குகிறது. உனக்காக மிகவும் முயன்று சம்பாதித்து பணம் சேர்த்து . . .'

நிமிர்ந்தாள் . . . . .

"என்ன . . . இடம் கரடு முரடா இருக்கே!"

"ஃபாக்டரி உள்ளே இருக்காம்... அந்தச் சின்னக் குன்று தெரியுது பாருங்க. அதுக்குப் பின்னால்... வாங்க நடக்கலாம்."

'தியாகங்கள் செய்யவும் தீரச் செயல்கள் புரியவும்'

நடந்தார்கள். ஒரு சின்ன ஆஸ்பெஸ்டாஸ் கூரை வைத்த ஷெட் தெரிந்தது.

இது என்ன, அவன் அதைத் திறக்கிறானே...

திடீரென்று கணவனின் வார்த்தைகளில் அமைந்த கனவுலகிலிருந்து உலுக்கி எழுப்பப் பட்ட நிலை புரிந்தது! ஓட நினைப்பதற்குள் மூர்த்தி அவளைப் பற்றித் தரதரவென்று இழுத்து... மூர்க்கத்தனமாக அந்த அறைக்குள் வீழ்த்தப்பட்டாள்.

உள்ளே தாளிட்டான்.

## 12. சுஜாதா

மன்னிக்கவும். கதாசிரியனாகிய நான் இந்தக் கதையை முடிப்பதற்கு முன் குறுக்கிட வேண்டியிருக்கிறது. இந்தக் கதைக்கு என்ன முடிவை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? ஒரு அழகான பொருள் சேதமடையும் பொழுது நம் எல்லோருக்குமே ஒரு இழப்பு இருக்கிறது. உலகமே கொஞ்சம் கொச்சைப்படுத்தப்படுகிறது. உலகத்தில் நிகழும் அத்தனை குற்றங்களையும் தவிர்ப்பதற்கு புத்தக நியாயங்கள் இல்லை.

ஒரு கதாசிரியனால் முடியுமா? பார்க்கலாம்... வேணி சேதப்படுத்தப்படும் இந்தக் கணத்தில் அவளைத் தப்பிக்க வைக்க நம்மால் என்ன செய்ய முடியும்? மூர்த்தியைவிட அவள் வலுவானவள். அவனைச் சுலபத்தில் கடித்து, அடித்து நொறுக்கிவிட்டுத் தப்பித்து விட்டாள் என்று சொல்லலாமா?

மூர்த்தி கடைசி நிமிடத்தில் தைரியமிழந்து "சகோதரி என்னை மன்னித்துவிடு" என்று சொல்லி மனதைத் தேற்றிக்கொண்டு ஓடி விட்டான் என்று சொல்லவா?

டாக்ஸிக்காரன் சந்தேகப்பட்டு அவர்களைத் தொடர்ந்து கதவை உடைத்துக் காப்பாற்றினான் என்று சொல்லவா?

யோசித்துப் பார்த்தால் ஒரு கதாசிரியனுக்கு எத்தனையோ முறைகள் உள்ளன அல்லவா — வேணி என்னும் அந்த அழகான மலரைச் சேதப்படுத்தாமல் காப்பாற்றுவதற்கு?

ஸாரி.

உலகத்தில் நியாய அநியாயங்களில் ஆதாரமாக ஒரு அபத்தம் இருக்கிறது.

மத்யானம் அந்த வழி சென்ற ஒரு பள்ளிச் சிறுவன் திறந்திருந்த அந்த ஷெட்டுக்குள் எட்டிப்பார்த்தான். முதலில் கீழே சிதறிக்கிடந்த அந்தக் காகிதங்களைப் பார்த்தான். என் இ...னி...ய... மனைவி...' நிமிர்ந்தான்...

ஓரத்தில்... இது என்ன... அது... ரத்தம்... ஒரு உடல்...

'அம்மாடி!' என்று அலறிக்கொண்டே ஓடினான்.

ஸாரி!

1981